# சிவாஜி

20-6-48

விலை அணா 2

## ராஜா சர். அண்ணாமலை



செட்டி நாட்டரசர் ராஜா சர். அண்ணாமலை செட்டியாரவர்கள் சென்ற பதினைந்தாம் தேதியன்று காலமான செய்தி கேட்டுத் தமிழ் நாடே துக்கத்திலாழ்ந்திருக்கிறது. பொருள் வலியும், திறனும் ஊக்கமுங்கொண்டு வர்த்தக உலகில் உலவி வந்த இப்பெரியார் கல்வி, கலைத் துறைகளிலும் அக்கரை காட்டி அரும்பணி புரிந்திருக்கிறார். தமது 67-வது வயதில் இவ்வுலகை நீத்த இப்பெரியாரின் ஆன்மா சாந்தி அடையுமாக.

ஒரிஜினல் சாந்தா
ராயல் ஸ்டார்

சிறு கதை

# சிதைந்த சிற்பம்

"இரா. சௌ. ரா."

அன்று எங்கள் ஊர்க் கோயிலை பார்த்துவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தேன். சிறிது தூரம் சென்ற பிறகு என் நண்பன்.

"இங்கு ஒரு பாழடைந்த 'சிற்ப வீடு' ஒன்றிருக்கிறது. சிற்பங்களெல்லாம் உடைந்திருந்தாலும் நன்றாயிருக்கின்றன. அதையும் பார்த்துவிட்டுப் போவோமா" என்றான்.

சரித்திரங்களைத் தங்களுக்குள் புதைத்து வைத்துக் கொண்டிருக்கும் சிற்பங்களிடம் எனக்கு ஒரு பிரேமை. சிற்ப வீட்டை நோக்கிக் கால்கள் நடந்தன.

காடுபோல சுற்றிலும் மரங்களடர்ந்துள்ள ஒற்றையடிப் பாதையின் வழியாகச் சென்று நாங்கள் அந்தப் பாழடைந்த வீட்டை அடைந்தோம்.

"இதுதான் நாம் பார்த்தோமே அந்தக் கோவிலைக் கட்டிய தலைமை சிற்பியின் வீடு" என்றான் நண்பன்.

நெடுநாளாக மனித சஞ்சாரமற்ற அந்த வீட்டிலே வௌவால் நிறைய இருந்தன. உடைந்தும் உடையாததுமான பல சிற்பங்கள் அங்கே சிதறிக் கிடந்தன.

என் கருத்தைக்கவர்ந்தது அந்த ஒரு சிற்பம்தான். அது ஒரு பெண்ணின் உருவச்சிலை தான்—சந்தேகமேயில்லை.

அதன் கண்களில் தான் எத்தனை ஜீவஒளி? உடலில்தான் எத்தனை நளினம்? பார்வையில்தான் என்ன கவர்ச்சி?

வெறும் தொழில் முறையில் அவன் இந்தச் சிற்பத்தை செய்திருக்கமுடியாது. ஐயோ! அதன் உடல் ஏன் முண்டமாயிருக்கிறது. காலப்போக்கில் சிதைந்து விட்டதா? இல்லை. ஒருபோதுமில்லை அதைச் செய்தவனேதான் அதைச் சிதைத்தவனும். மிகுந்த சிரமத்துடன் உருவாக்கிய சிற்ப பொக்கிஷத்தை அவன் ஏன் சிதைக்க வேண்டும்? கோவிலில் இடம் பெற வேண்டிய சிற்பம் கேட்பாரற்று இங்கு ஏன் கிடக்கவேண்டும்? என் கால்கள் நடக்க மறுத்தன. கை கன்னத்திற்குச் சென்றது. உடல் உட்கார்ந்துவிட்டது.

ஃ ஃ ஃ

அன்று அரண்மனையில் விஜயதசமிக் கொண்ட்ட்டம் கோலாகலமாய் நடந்துகொண்டிருந்தது. சோழ மன்னன் கலை வள்ளலாகையால் அவன் பரிசையும் பாராட்டுதலையும் பெற கலைஞர்கள் கூடியிருந்தார்கள். தம் கலைத் திறமையை மன்னனுக்கு விளக்கி பரிசும் பெற்றுச் சென்று கொண்டிருந்தார்கள்.

விழா முடியும் சமயம் சிற்பி ஒருவன் மன்னனைக் காண விரும்புவதாக செய்தி வந்தது.

வந்த சிற்பி ஒரு இளைஞன்! வாலிபமுடனிருக்கும் கலைப் பெருமையும் முகத்தில் பிரதிபலித்தன. வணக்கம் செலுத்தினன் வந்த இளைஞன். மன்னன் கண்கள் சுற்றுமுற்றும் பார்த்த வண்ணமே இருந்தன. மன்னன் தேடுவது இன்னதென்று சிற்பி தெரிந்து கொண்டான். தனது கையில் கொண்டுவந்திருந்த பெட்டியைத் திறந்து ஒரு 'வஸ்து'வை எடுத்து அரசன முன் வைத்தான். என்ன ஆச்சர்யம்! அவ்வளவு குறைந்த பரப்பிற்குள் ஒரு ஆலயம் அடைபட்டுக்கிடந்தது சுற்றுச் சார்புகளுடன். மன்னனுடையபுருவங்கள் உயர்ந்தன. மந்திரியிடம் அரசன் ஏதோ தனிமையில் சொன்னன். சிற்பி பரிசுபெற்றுப் போய்விடவில்லை. அவன் கலை ஒரு கோவில் மூலம் வெளியாகவேண்டுமென்று அரசன் கட்டளை!

ஃ ஃ ஃ

அரசன் கட்டளைப்படி கோவில் கட்டுவதற்கான ஏற்பாடுகள் துரிதமாய் நடந்து கொண்டிருந்தன. மனித சஞ்சார மதிகமில்லாத காட்டுப்பாதையிலே வீடு கட்டிக் கொண்டு சிற்பி தன் சிருஷ்டித் தொழிலில் ஈடுபட்டான்.

அந்தி மங்கும் நேரம். குறுக்கே படர்ந்திருந்த கொடிகளைத் தன் கைகளினுல் தள்ளிவிட்டுக்கொண்டு சிற்ப வீட்டுக்குள் நுழைந்தாள் ஒரு பெண். அவள் தான் சிற்பியின் காதலி. இந்த உலகில் சிற்பங்களுக்கு அடுத்த படியாக அவன் உள்ளத்தைக் கவர்ந்தவள் அவள் தான். சிற்பியின் புன்னகை அவளை வரவேற்றது. அவள் பேச ஆரம்பித்தாள்.

"நீங்கள் சோழநாட்டின் தலைமைச் சிற்பி. நான் ஒரு ஏழைக் குடியானவப் பெண் தானே! நாளைக்கு கோவில் கட்டி முடிந்து உமது பெயர் பிரபலமாகி புகழ் ஏணியின் உச்சிப்படியில் நீங்களிருக்கும்போது இந்த ஏழையை எங்கே நினைக்கப் போகிறீர்கள்?"

"நீ நினைப்பது முற்றிலும் தவறு. இனிமேல் எப்போதுமே உன்னை மறப்பதென்பது என்னுல் முடியாத காரியம்" சிற்பியின் வார்த்தைகள் இவை.

அவர்கள் பேச்சின் நடுவே அந்தப்பெண் சொன்னுள்! "இந்தக் கோவில் உள்ளவரையில் உங்கள் பெயர் நிலை பெற்றிருக்கும். ஆனுல் தங்களைத் தவிர என்னை யார் நினைவில் வைத்திருக்கமுடியும்?"

சிற்பியின் முகத்தில் புதுக் களை தென்பட்டது. "இல்லை. என் உழைப்பால் உருவாக்கப் போகும் கோயிலிலே கட்டாயம் உனக்கு இடம் உண்டு. என்னை நினைப்பவர்கள் கட்டாயம் உன்னையும் நினைப்பார்கள்"

அன்று முதல் தன் காதலியைச் சிலை வடிவில் செய்வதில் நாளெல்லாம் செலவிட்டான் சிற்பி. கனவுப் பொக்கிஷமாக விளங்கப் போகும் அந்த சிற்பத்தின் மூலம் கோவிலுக்கும் தனக்கும் பெரும் புகழ் ஏற்படுமென்று கனவு கண்டான் சிற்பி!

ஃ ஃ ஃ

கோயிலில் இடம்பெற வேண்டிய சிற்பங்களையெல்லாம் மன்னன் பார்த்துக்கொண்டே வந்தான்.

"இதற்கு இணையேயில்லை" "இதை எப்படி சிருஷ்டித்தீர்கள்" "கண்ணன் என்னுடன் பேசுகிருரே' என்றெல்லாம் கூறிக் கொண்டு வந்தான் மன்னன். அவன் கண்களில் பட்டது 'அவள் சிலை'! ஆச்சரியத்தால் உயரவேண்டிய அவன் இமைகள் ஆத்திரத்தினுல் சிவந்தன.

"புனிதமான ஆண்டவன் ஆலயத்தில் காமத்தின் கலா மந்திரமான இந்த சிற்பத்திற்கு இடமில்லை. மற்றவைகள் வந்து சேரட்டும்" மன்னன் பேச்சு சிற்பியின் தலையில் செம்மட்டியாலடிப்பதுபோலிருந்தது.

"மன்னிக்கவேண்டும். மகாராஜா. இந்தச் சிற்பத்திற்காக மிகுந்த சிரமப்பட்டிருக்கிறேன்......" மன்னன் சிற்பியின் பேச்சைக் கேட்டுக்கொண்டு அங்கே நிற்கவில்லை.

ஃ ஃ ஃ

"உன்னைச் செய்ய எத்தனை பாடுபட்டேன்? உன் உருவம் ஆண்டவன் கோவிலை அலங்கரிக்கும். அதனுல் என் புகழ் திக்கெங்கும் பரவுமென்று கனவு கண்டேனே! எங்கள் காதல் உன்னுல் சிரஞ்சீவித் தன்மை பெற்றுவிடுமென்று எண்ணினேனே? அதன் பலன் இதுதானு?

சிற்பியின் பேச்சுக்கு சிலை எப்படி பதில் கூற முடியும்? சிற்பி பேய்ச் சிரிப்பு சிரித்தான். அழகே வடிவாய் விளங்கிய உருவம் ஒரே அந்தகார மயமாய்க் காட்சியளித்தது அவனுக்கு.

தன் சிருஷ்டியைக் கண்குளிரப் பார்த்துப் பெருமூச்சு விட்டான் சிற்பி.

மறுகணம் அவன் உள்ளே சென்றான். அவன் கையில் பெரிய ஆயுதமொன்று இருந்தது.

"என் கனவு சிதைந்ததுபோல் உன் உருவமும் சிதைந்து போகட்டும்" மறு கணம் பூரணப் பொலிவுடன் விளங்கிய சிற்பம் இரண்டு மூன்று துண்டுகளாகக் கீழே விழுந்தது. கலைப் பொக்கிஷம் கற் குவிலாயிற்று. சிற்பி நிம்மதியான பெருமூச்சு ஒன்று விட்டான்.

தற்செயலாகப் பின்பக்கம் திரும்பிய சிற்பி திகைத்துவிட்டான்.

எந்தப் பெண்ணை சிலைக்குள் புகுத்தியிருந்தானே அதே பெண் பின்புறம் நின்று கொண்டிருந்தாள்.

"இனி நான் சிற்பத் தொழிலையே செய்யப் போவதில்லை. ஒரு ஏழைக் குடியானவனுகவே நான் என் வயிறை வளர்க்கப் போகிறேன்" சிற்பி கூறிய வார்த்தை இது.

வந்தவள் சொன்னுள்:- "அந்தச் சிற்பம் எவ்வளவுஅழகாயிருந்தது. அதைஉடைத்துவிட்டீர்களே. இனி அதைப்போல் செய்ய தங்களாலெங்கே முடியப் போகிறது"

"அது உன்னைப் பார்த்துச் செய்த சிற்பம். உண்மையான உயிருள்ள சிற்பமான நீ எனக்குக் கிடைத்திருக்கும்போது கட்டைக் கருங்கல் சிற்பங்களுடன் என்ன வேண்டிக் கிடக்கிறது எனக்கு" என்றான் சிற்பி.

ஃ ஃ ஃ

நான் கன்னத்திலிருந்த கையை எடுத்தபோது நன்றாக இருட்டி விட்டது. கற்பனையிலே காட்சியளித்தவர்கள் தங்கள் ஊரையும் பேரையும் சொ ல் ல ா ம லே மறைந்து விட்டார்களேயென்று வருத்தமாய்த்தானிருந்தது. ஆனுல் உண்மைக்குத் தானே ஊரும் பேரும்?

★

## சர்வதேச நாடக கழகம்

சர்வதேச நாடக கழகத்தின் பிரிட்டிஷ் ஸெண்டர் சமீபத்தில் லண்டனில் திறக்கப்பட்டுள்ளது. கடந்த கோடைகாலத்தின்போது நடைபெற்ற ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான கலாச்சார ஸ்தாபனத்தின் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி-அதாவது பிரஸ்தாப ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாட்டிலும் ஒரு தேசிய நாடக கழகம் அமைக்கவேண்டும் — நாடகங்கள் சம்பந்தமாக உலகின் சகல பகுதிகளிலும் கையாளப்படும் முறைகளையும், கலைகளையும் பரஸ்பரம் பரிமாறிக்கொள்வதில் ஆர்வம் அளிப்பதே இச் சர்வதேச நாடக கழகத்தின் முக்கிய நோக்கமாகும். பிரிட்டனின் தேசிய நாடக கழகத்திற்கு பிரிட்டிஷ் நாடக லீகின் தலைவரான ஈஷர் பிரபு சேர்மனுக நியமிக்கப்பட் டு ள் ள ா ர். ஜே. பி. பிரீஸ்ட்லி அவர்கள் நிர்வாகக் கமிட்டியின் ஒரு அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

கல்யாண காலங்களுக்குத் தேவையுள்ள பட்டு ஜவுளிகளுக்கு
★ பாபு இண்டஸ்ட்ரீஸ் ★
கல்சிலேட் தயாரிப்போர் & பட்டு ஜவுளி வியாபாரம், டவுன் ஸ்டேஷன் ரோடு, திருச்சி.

**திருச்சி ராக்ஸியில்**

19-6-48 முதல் 2-வது வாரம்
சின்னப்பா, சகுந்தலா
சந்தானலெக்ஷிமி
கிருஷ்ணன், மதுரம்
நடித்த
**பிருதிவிராஜன்**
தமிழ் படம்

# சிவாஜி

ஆசிரியர் :— திருலோக சீதாராம்

மாலை 13 | திருச்சி, 20—6—48 சர்வதாரி-ஸு ஆனி-மீ, 7-உ | மணி 29

**திருச்சி வெலிங்டனில்**

புதிய R. C. A. மிஷின்களில்
19-6-48 முதல் 8-வது வாரம்
P. S. கோவிந்தன்,
V. N. ஜானகி
நடித்த
**ஆயிரம தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி**
(தமிழ் படம்) நடைபெறுகிறது.

# பணங்கட்டிப் பரீட்சையின் பாடுபட்ட முடிவுகள்

## பால் கண்ட வயிற்றில் புளியைக் கரைத்தல்

**போன** வருஷம் எஸ். எஸ். எல். சி. என்ற நாமகரண முடைய பணங்கட்டிப் பரீட்சையின் வினாத் தாள்கள் பரீட்சைகளுக்கு முன்பே அம்பலப்பட்டு மாகாண மெங்கும் ஒரே அமர்க்களப்பட்டது.

இந்த வருஷம் வேறு ஒரு அமர்க்களம் நடந்து வருகிறது

இந்த ஆண்டு பரீட்சை முடிவு அறிவிப்புகளே தாறுமாறாகவும் குழப்பமாகவும் இருந்திருக்கின்றன. ஒழுங்கு தவறிப் பற்பல வாறு வெளிவந்திருக்கின்றன. இதனால் பொதுமக்களுக்குப் பலவித தொந்தரவுகளும், அவநம்பிக்கையும் ஏற்பட்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

முன்பெல்லாம் ஒவ்வொரு பரீட்சையின் முடிவுகள் பூராவும் ஒரே நாளில் சேர்ந்தாற்போல் பிரசுரமாகும். தொக்கு, சொச்சம், மிச்சம் ஏதும் இருக்காது.

ஆனால் இவ்வாண்டில் இந்த சொச்ச மிச்ச நச்சுக்கள் அதிகமாயிருந்திருக்கின்றன.

எம். ஏ. பரீட்சையில் ஒரு பகுதி முடிவுகள் அறிவிக்கப்படுகையில் சில குறிப்பிட்ட நம்பர்களை மாத்திரம் குறிப்பிட்டு, அவற்றிற்கான முடிவுகள் பின்னர் அறிவிக்கப்படும் என்று பிரசுரிக்கப்பட்டது பலவித சந்தேகங்களை எழுப்பியிருக்கிறது.

வேறு துறைகளில் இருக்கும் ஒழுங்கீனம் கல்வித் துறையிலும் புகுந்திருப்பது ரொம்ப பயங்கரமான விளைவுகளைத்தான் உண்டாக்கியிருக்கிறது. கல்வி இலாகாவின் மாண்பில் மக்களுக்கிருந்த மரியாதை இவ்வாண்டு ரொம்பக் குறைந்து போய்விட்டது என்பதை மறுக்க முடியாது.

ஃ ஃ ஃ

பணங்கட்டிப் பரீட்சை முடிவுகள் பிச்சம் பிச்சமாக வெளிவந்த தோடல்லாமல் முன்னால் தேறினதாக அறிவிக்கப்பட்ட பல பையன்கள் பின்னால்தோல்வியுற்றதாக அறிவிக்கப்பட்டது. இது எத்தகைய மனோ நிலையை உண்டாக்கியிருக்கும் என்று ஊகித்தால் தெரியும்.

பரீட்சை ஹாலில் கையில் வினாத் தாள்களை வாங்கும்போதே எத்தனையோ பையன்கள் தங்களது தலை எழுத்து "தோல்வி" தான் என்று தெரிந்துகொண்டிருக்கலாம். சிறிதேனும் நம்பிக்கையின்றி அவர்கள் மனம் குழம்பி வந்திருக்கலாம். முடிவுகள் அறிவிக்கப்படும் நாள் நெருங்க நெருங்க இவர்களில் பலர் தலை மறைந்து திரிந்து வந்திருக்கலாம்.

ஆனால் திடீரென்று சற்றும் எதிர்பாராத முறையில் தங்கள் நம்பர்கள் தேறின நம்பர்களில் வந்தபோது இவர்கள் எத்தகைய உணர்ச்சி அடைந்திருப்பார்கள்? என்ன ஆச்சரியம் கொண்டிருப்பார்கள்? இவர்களது தந்தைமார்கள் எத்தனை கோயில்களுக்குச் சென்று அர்ச்சனைகளும், நைவேத்தியங்களும் செய்திருப்பார்கள்? இந்த மாணவர்கள் தம் நண்பர்களுக்கு எவ்வளவு காசு செலவு செய்து டிபன் வாங்கிக் கொடுத்துக் கொண்டாடியிருப்பார்கள்?

மாணவர்கள் டிபனுக்கு செலவழித்த காசையோ, தந்தைமார் அர்ச்சனைக்குச் செலவிட்ட பணத்தையோ நாம் இங்கு முக்கியமாகக் குறிப்பிடவில்லை. அந்த உணர்ச்சிக் கொந்தளிப்பையே குறிப்பிடுகிறோம்.

இப்படி திடீரென்று சிலநாள் கழித்து இந்த இன்ப முடிவுகளுக்குத் திருத்தம் வந்தால்.........!!

ஃ ஃ ஃ

தூக்கு நிச்சயம் என்று நீதிஸ்தலத்தில் நிற்பவனது நிலையைக் கற்பனை செய்யுங்கள். அவன் குற்றமற்றவன் என்று கோர்ட்டார் தீர்ப்புக்கூறி விடுதலை உத்தரவு செய்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். கோர்ட்டை விட்டு வெளியே வந்ததும் அவனைத் திரும்பவும் பிடித்து உள்ளே கொண்டுபோய்த் தூக்கு மேடையில் நிறுத்தினால் அவன் மனோ நிலை எப்படி இருக்கும்.........!!

ஃ ஃ ஃ

எஸ். எஸ். எல். சி. பரீட்சை முடிவுத் திருத்தங்களைப் பொறுத்தமட்டில் சர்க்கார் கல்வி இலாகா—சர்வகலாசாலை பரீட்சைக் கிளை—சூழ்ச்சிகள் ஏதும் செய்திருப்பதாக நாம் சந்தேகப்படவில்லை. ஆனால் ஒரு தடவை வெளியான முடிவுகளுக்குத் திருத்தங்கள் செய்யும் இந்தப் புதிய பழக்கம் கொடுமையான குற்றமாகும். கட்டுப்பாடும், மரியாதையும் குலைந்துபோகுமாறு செய்யும் ஒரு மன்னிக்க முடியாத செயல். அதுவும் 'தேறிவிட்டீர்கள்' என்று கூறிவிட்டு 'இல்லை, தேறவில்லை' என்று அப்புறம் கூறுவதென்றால்......!

அரசாங்கம் இது விஷயத்தில் காலதாமதத்துக்கு பயப்பட்டிருக்க வேண்டாம். சற்று ஒத்திப் போனாலும் முடிவுகள் ஒழுங்காக கிரமமாக வெளிவந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும்.

இந்தக் கொடிய குற்றத்துக்கு பிராயச் சித்தம் செய்வதுபோல் தேறினதாகக் கூறப்பட்டுப் பின் தோல்வியாகத் திருத்தப்பட்ட நம்பர்களைத் தேறின கோஷ்டியிலேயே சேர்த்து விட்டாலும் பெரிய நஷ்டம் ஒன்றும் ஏற்படப் போவதில்லை. இப்படிச் செய்யாவிட்டாலும் இனி இது விஷயத்தில் ரொம்ப கவனமும், அக்கரையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

கல்விப் பரீட்சைகள் லாட்டரி விநோதங்களாகவும், குதிரைப் பந்தயங்களாகவும், "லக்கிடிப்" புகளாகவும், "ஷூட்டிங்" சூதாட்டங்களாகவும் மாறிவிட இடங் கொடுக்கக்கூடாது.

பெரிய பந்தயங்களில் "அம்பையர்"கள் வகிக்கும் பொறுப்பான நிலையை அரசாங்கம் - கல்வி இலாகா-வகிக்கிறது. எனவே தன் மரியாதையும், கௌரவமும், கட்டுப்பாடும் குறையத் தக்க எந்தக் குற்றத்தையும் தன் செயல்களில் புக அது விட்டுவிடக் கூடாது.

ஃ ஃ ஃ

(13-ம் பக்கம் பார்க்க.)

**நீங்கள் படித்தீர்களா?**

பிரபல ஆசிரியை வி. ஆர். ராஜம்மா
எழுதிய
**பிடி சாமியாரை**
(ரஸமான கதை)
**விலை 3 அணா**
முன் பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள்மட்டும் எழுதவும்
தனிப்புத்தகம் வேண்டுவோர் 4-அணா ஸ்டாம்பு
அனுப்பவும்.
"பாப்பா" பதிப்பகம்,
38, நாகப்ப அய்யர் தெரு, சென்னை. 5.

**பட்டு & நூல்**
ஜவுளிகளுக்கு
**ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஸ்டோர்ஸ்,**
No. 4, சின்னக்கடைத் தெரு, (மலைவாசல்)
தெப்பக்குளம் P. O., திருச்சி.



# இது தானே உலகம்

"புனர் ஜன்மம்"

உலகத்தில் ஏதாவது ரஸமாக நடந்து கொண்டிருக்காவிட்டால் நாம் "இதுதானே உலகம்" என்று சுட்டிக் காட்டி இந்த உருண்டை மண்ணுலகை ரஸிக்கப் போகிறோமா என்ன! ஒரு நாளுமில்லை. உலகம் இதுவுமாய், அதுவுமாய், எல்லாமுமாய் இருப்பதால்தான் நாம் புத்திசாலித்தனமாக அவ்வப்போது சமயத்துக் கேற்றபடி இதுதானே உலகம் என்று கூறி விட்டு மீசையில் கைபோட்டுக் கொண்டு, தாடியை வருடிக் கொண்டு, விரல் நகத்தைப் பல்லுக் கிரையாக்கிக் கொண்டு, பொடி, புகையிலை போட்டுக்கொண்டு அலட்சியமாக நடமாட முடிகிறது.

## ஹாமலின் கதை

ராபர்ட் பிரௌனிங் என்று ஒரு ஆங்கிலக் கவியுண்டு. இவரது கவிதைகள் சாந்தமும், அன்பும், பக்தியும் நிரம்பித் தளும்பும். "பிப்பா செல்கிறாள்" என்ற மகோன்னதமான கவிதையே அவரது தத்துவத்தை நன்றாக விளக்குவது.

"ஹாமலின் நாயனக்காரன்" என்ற கவிதை சிறுவர்களையும், பெரியவர்களையும் ஒருங்கே குலுங்க வைக்கும் அதிசயக் கவிதை. இதற்கும் பிரௌனிங் அவர்களே ஆசிரியர்.

இந்த ஹாமலின் நாயனக்காரன் ஒரு அதிசயப் பிரகிருதி.

நமது கிராமாந்தரங்களில் சுலப சம்பாத்தியம் நடத்தும் பாம்பு பிடிப்பவன் பரம்பரையைச் சேர்ந்தவன் போலிருக்கிறது இவன். பல் பிடுங்கின பாம்பை வீட்டுக்குள் விட்டு விட்டு, உள்ளே பாம்பிருப்பதாகக் கூறி கீச்சு மூச்சென்ற மகுடி வாசித்து அதை வெளியே வரவழைத்து அடுத்த வீட்டில் புகச் செய்து இப்படியே அரிசியும், காசும் சம்பாதிக்கும் பாம்புக்காரனை நம் மெல்லோருக்கும் தெரியும்.

இந்த ரகத்தைச் சேர்ந்தவனே ஹாமலின் பிரகிருதி. ஹாமலின் நகரத்து மேயரது வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டதோடு இவன் தன் வாத்ய சக்தியினால் நகரத்திலிருந்த எலிகளை யெல்லாம் தன் பின்னால் ஓடி வரும்படி செய்து எலி உபத்திரவத்தை ஒழித்தான் இவன்.

## கார்பி 'நாயனக்காரன்'

பிரௌனிங் அவர்கள் கற்பனையில் முளைத்த ஹாமலின் நாயனக்காரன் இலக்கியத்திலிருந்து வெகு காலம் தவங்கிடந்து இன்று பூமியில் இறங்கியிருக்கிறான் போலிருக்கிறது!

இங்கிலாந்தில் நார்த்தாம்டன் தாலூகாவில் கார்பி என்னுமிடத்தில் ஜான் ஹேவுட் என்ற பெயருடன் இந்த மாஜி ஹாமலின் அவதரித்திருக்கிறான் போலிருக்கிறது!

## நாயனமும் விசிலும்

ஹாமலின் பேர்வழி நாயனக்காரன். ஆனால் இந்தக் கார்பியிடம் நாயனமோ வேறெவ்வித வாத்தியமோ கிடையாது. ஆனால் வாயால் சீழ்க்கை அடிப்பதில், 'விசில்' ஊதுவதில், இவன் மகா நிபுணன்.

யார்க் தாலூகா காடுகளில் மிருகங்களிடத்திலும், பறவைகளிடத்திலும் நட்பு பூண்டு, வெகுகாலம் அவற்றின் குரல்களைக் கேட்டு அவற்றைப் போலவே கொக்கரித்து, உறுமி, கூவி, குரைத்துப் பழகிக்கொண்டான்.

## எலிகளிடையே

ஒரு நாள் இவனுக்கு விபரீதமான ஒரு யோசனை பிறந்ததாம். இந்தப் பழாய்ப் போகிற எலிகளை ஏன் வசியம் செய்ய ஒரு வழி கண்டுபிடிக்கக் கூடாது என்று சிந்தித்தான்.

இரவுகளில் எலி வங்குகளுக்கு அருகே காதைத் தீட்டிக்கொண்டு உட்கார்ந்தான். எலிகளின் காதற் கூக்குரல்களை கவனித்தான். ஆண் குரல் எது, பெண் குரல் எது என்று கணித் தறிந்துகொண்டான். இந்தக் குரல்களைப் பழகி வெற்றி பெற மூன்று முழு வருடங்கள் ஆயின.

## சபாஷ் ஹேவுட்

ஹேவுட் வந்தான். எலி மருந்துகளைக் கேலி செய்தான். எலிப் பொறிகளைப் பார்த்துச் சிரித்தான். இரவுகளில் எலிக் குரல் கிளப்பினான். குஞ்சும் குளுவானுமாக கூட்டம் கூட்டமாக, அடையப் புடைய எலிகள் வங்குகளை விட்டு வெளிக்கிளம்பி வந்தன. ஹேவுட்டின் கரத்தால் யமலோகம் சென்றன.

"சபாஷ் ஹேவுட்" என்றனர் யார்க் ஷையர் மக்கள். வேறு இடங்கள் ஹேவுட்டை வருந்தியழைத்தன. வடவேல்ஸ் மாகாணத்தில் 1147 எலிகள் ஹேவுட்டின் குரலுக்குப் பலியாயின.

எனவே எலி மார்க்கட்டில் ஹேவுட்டின் பெயர் பிரதானமாயிருந்து வருகிறது.

## நமது வீடுகள்

நமது வீடுகளில் எலி உபத்திரவம் ரொம்பக் கொடுமையாயிருக்கிறது. நமது எலிகள் முக்காலும் பெருச்சாளிகளாகவே இருக்கின்றன—பன்றிக் குட்டிகள் என்று கூடச் சொல்லலாம். இவற்றின் நடமாட்டம் நம்மை பகல், இரவு எல்லா வேளைகளிலும் அலறவைக்கிறது. ஒரு வங்கை சிமெண்டு பூசி அடைத்தால் இன்னும் ஒரு வங்கு பறிக்கப்படுகிறது. என்னே இந்த எலிகளின் மாண்பு!

## பிறந்தாலும்

உலகத்தில் பிறந்தாலும் எலியாகப் பிறக்கவேண்டும் என்று பலர் கூறி நான் கேட்டிருக்கிறேன். வங்கு பறிப்பதில்—குழி தோண்டுவதில்—அவைகளுக்கிருக்கும் ஆசையே இப்படித் தெரிவிக்கப்படுகிறது என்று நான் நினைக்கிறேன்.

எனக்கென்னவோ, பிறந்தாலும் ஹேவுட்டாகப் பிறக்கவேண்டும் என்றுதான் தோன்றுகிறது—இந்த எலிகளைக் கொல்ல.

## எலிகள் வாழ்க

ஆனால் ஒரு முக்கியமான உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. இந்த உலகத்தில் எலிகள் இருக்கும் வரையில்தான் பிரௌனிங் படைத்த ஹாமலின் நாயனக்காரனையும், கடவுள் படைத்த— அல்லது இயற்கை படைத்த—கார்பி ஹேவுட்டையும் நாம் மறக்காமலிருக்க முடியும். எலிகள் மறைந்தால் இவர்களையும் நாம் மறந்துவிடுவோம்.

ஆனால் ஹாமலின் பிரகிருதியை நாம் மறக்க விரும்பவில்லை. அதே போல் ஹேவுட்டையும் மறக்க ஆசைப்படவில்லை. எனவே எலிகள் வாழ்க!

★

# அந்தரங்கமா, ஆர்வ மிகுதியா?



வங்க கவர்னர் ராஜாஜி வருகிற 21-ம் தேதியன்று இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகப் பதவி ஏற்பார். அவர் பதவியேற்ற பின்னர் முக்கியமான பல அரசியல் திருப்பங்கள் ஏற்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. என்ன திருப்பம் நேர்ந்தாலும் நேராவிட்டாலும் கவர்னர் ஜெனரல் ராஜாஜியும், உள்நாட்டு மந்திரி பட்டேலும் (மேற்கண்ட படத்தின் சுவைபோல்) அந்தரங்கத்துடன் ஒத்துழைத்துப் பல திறமையான காரியங்கள் செய்வர் என எதிர்பார்க்கலாம்.

## குருடர் வாசகசாலை

1882 ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டதும் சர்வதேச நூல் நிலையமென்று தற்போது வர்ணிக்கக் கூடியதும் லண்டனிலிருந்து உலகத்தின் சகல பகுதிகளுக்கும் அரும் பெரும் பணி ஆற்றி வருவதுமான 'குருடர்களுக்கான தேசிய புத்தகசாலை' (National Library for Blind) தன் அலுவல்களை மேலும் விஸ்தரித்துத் தொடர்ந்து சேவை செய்ய இன்னும் அதிக நிதி தேவைப்படுவதால் பொதுமக்கள் மனமுவந்து தங்களாலியன்றவரை நன்கொடை வழங்கும்படி பிரிட்டிஷ் மக்களுக்கு சமீபத்தில் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்நூல் நிலையம் திறக்கப்பட்ட பொழுது ஆரம்பத்தில் 40 வால்யூம் புத்தகங்களேயிருந்ததுடன் பொரய்லி பாஷை வாசிக்கத் தெரிந்த மிகக் குறைவான குருடர்களுக்கே விநியோகிக்கப்பட்டு வந்தன. ஆனால் இன்று இப்புத்தகசாலையில் சுமார் 5 லட்சம் புத்தகங்கள் கைவசமிருப்பதுடன் உலகத்தின் சகல பகுதிகளிலுள்ள குருடர்களுக்கும் தபால் மூலம் நூல்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

மான்செஸ்டர் நகரிலுள்ள இந்நூல் நிலையத்தின் ஒரு கிளை பிரிட்டிஷ் தீவுகளின் வட பகுதிகளிலுள்ள சகல வாசகர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்து வருகின்றது. ஒவ்வொரு பிரதேசத்திலும் இந்நூல் நிலையத்தின் கிளை ஸ்தாபனங்கள் குருடர்களுக்கென ஆற்றிவரும் சேவையை மெச்சும் தோரணையில் ஸ்தலஸ்தாபன அதிகாரிகள் அந்தஸ்தாபனங்களை அங்கீகரித்துள்ளதுடன் அவ்வப்போது நிதி மான்யமும் வழங்கி வருகின்றனர். எனினும் இந்நூல் நிலையத்தின் அலுவல்களில் பெரும் பகுதி தாமாகவே பிரிட்டிஷ் மக்கள் கொடுத்து உதவும் நன்கொடையிலேயே நடைபெற்று வருகின்றன.

குருடர்களுக்கான நூல் நிலையம் சம்மந்தமாக பல பிரச்சினைகள் எழுந்தன. அத்துடன் இதர புத்தகசாலைகளுக்கு ஏற்பட்டிராத பல கஷ்டங்களையும் இப் புத்தகசாலை எதிர் நோக்க வேண்டியிருக்கிறது. பொரய்லி புத்தகங்கள் சாதாரணமாக மிகப் பெரியவை. ஏனெனில் ஒரு சிறிய புத்தகத்தை குருடர்களுக்கான பொரய்லி பாஷையில் மொழி பெயர்க்கும்பொழுது அதி குறைந்த பட்சம் நான்கு அல்லது ஐந்து வால்யூம்களாக மாறிவிடுகிறது. ஆகவே வெளிநாட்டு வாசகர்களுக்கு அவைகளை அனுப்பும்பொழுது தபால் கட்டணங்களும் அதிகமாக செலுத்தவேண்டியிருக்கின்றன.

நூல்களை 'பொரய்லி' பாஷையில் மொழி பெயர்க்க அநேக நிபுணர்கள் எவ்வித பிரதி பயனுமின்றி உதவிசெய்ய முன் வந்துள்ளபோதிலும் ஒவ்வொரு புதிய புத்தகமும் சுமார் ரூ. 46–14–0 அடக்கமாகிறது. இதைப்போல இன்னும் எவ்வளவோ பிரச்னைகள் எழுந்தபோதினும் குருடர்களுக்கென ஒரு நூல் நிலையம் அமைக்கும் வேலை தடைப்படவில்லை. பிரிட்டிஷ் மக்களின் முயற்சிகளுக்கு பலனாகவே லண்டனில் குருடர்களுக்கென தேசீய நூல் நிலையமொன்று ஸ்தாபிக்கப்பட்டது. இந்நூல் நிலையத்தின் ஜாபிதாவில் அநேக நாடுகளின் இலக்கியங்களும் நாவல்களும் அடங்கியுள்ளன.

கடந்த 12 மாதங்களில் மட்டும் குருடர்களுக்கான தேசீய நூல் நிலையம் 14000 வாசகர்கள் அல்லது கழகங்களின் தேவையை பூர்த்தி செய்துள்ளதுடன் புத்தகசாலையின் செலவிலேயே (ஒரு வாசகருக்கு ரூ. 33-2-0 செலவு செய்யப்பட்டுள்ளது) 337000க்கு அதிகமான புத்தகங்களை வெளிநாடுகளுக்கும் அனுப்பியுள்ளது.

"குருடர்களுக்கு இன்பத்தையும் வாழ்க்கையில் நம்பிக்கையையும் ஊட்டுவதற்கு இந்நூல் நிலையம் எவ்வளவு தூரம் உதவி செய்யக்கூடு மென்பதை அறிய சிறிது கற்பனா சக்தியே தேவைப்படும்." என லண்டனிலிருந்து வெளியாகும் பிரபல 'டைம்ஸ்' பத்திரிகை பிரஸ்தாப நூல் நிலையம் நிதிக்காக பிரிட்டிஷ் மக்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளை ஆதரித்து எழுதியிருக்கும் அதன் தலையங்கத்தில் கூறுகிறது.

★





விருந்தில் கூட்டம் அதிகமாகத் தானிருக்க வேண்டும்! ஆனால் பாண்டத்திலே இரண்டொரு சிமிட்டா தேயிலையே காண்கின்றது, ஆகவே டீ நீர் பெருகியதாயும் ருசியற்றதாகவுமே இருக்கும். நல்ல டீ தயாரிக்க நபர் ஒன்றுக்கு ஒரு முழு தேக்கரண்டி வீதமும் பாண்டத்திற்காக ஒரு தேக்கரண்டியும் தேயிலை உபயோகிக்க வேண்டும்.

கோடிக்கணக்கான மக்கள் சோர்வு நீங்கி புத்துணர்ச்சிபெறுவதற்கு டீ அருந்துகிறார்கள். ஆனால் டீ அருந்தும் பலருக்கு நல்ல டீ என்னதென்பது தெரியாமலிருப்பது வருந்தத்தக்கவிஷயம் நல்ல டீ தயாரிக்க எவ்வித அதிகச் செலவும் கிடையாது. ஐந்து சுலபமான விதிகளை பின்பற்றினல் போதும். உங்கள் பணத்திற்கு முழு மதிப்பு பெறவும் தேயிலை பானம் நறுமணம் ததும்பியிருக்கவும் இவ்விதிகளை உங்கள் மனதில்பதிய வைத்து, எப்போதும் வீட்டில் இவ் விதிகளைப் பின்பற்றச் செய்வது அவசியம்.

**ஐந்து சுலபமான விதிகள்**

1. புதியதாக எடுத்ததும் புதிதாக கொதித்ததுமான நீரையே உபயோகிக்கவும். 2. உபயோகிக்கும் முன் பாண்டத்தை வெதுப்பாக்கவும். 3. நபர் ஒன்றுக்கு ஒரு தேக்கரண்டி வீதமும் பாண்டத்திற்காக ஒரு தேக்கரண்டியும் நல்ல தேயிலை உபயோகிக்கவும். 4. தேயிலை கஷாயம் உபயோகிக்கும் முன் 3 முதல் 5 நிமிஷம் நன்கு ஊறவேண்டும். 5. பாலைக் கோப்பையில் சேர்த்துக் கொள்ளவும்—பாண்டத்தில வேண்டாம்.

"தேயிலைப் பானம் - சில யோசனைகள்", என்ற இலவச புத்தகம் ஆங்கிலம், வங்காளி, ஹிந்தி, உருது, அல்லது தமிழ் பாஷையில் கிடைக்கும். கமிஷனர், இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பானஷன் போர்டு, 101 நேதாஜி சுபாஷ் ரோட், தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா என்ற விலாசத்துக்கு விண்ணப்பித்துப் பெறலாம்.

நன்கு தயாரித்த



டீ யைப் போன்றது வேறெதுவுமல்ல.

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது. IK.297.T.M



மனப்போராட்டம்

# என் குற்றம்

"அம்புலிமான்"

வருந்துகிறேன்! மிக மிக வருந்துகிறேன்! மனப்பூர்வமாக வருந்துகிறேன்! அவர் மானி; கௌரவமானவர்; நல்ல குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்; தங்கமானவர்; சிறந்த கல்விமான்! அப்படிப்பட்டவரின் மனதை நோகச் செய்து விட்டதற்காக வருந்துகிறேன்!

தவறு செய்துவிட்டேன்; தவறு என்பது தெரியாமல் தவறு செய்தேன்; அதன் முடிவு-பலன்-இவ்வளவு விபரீதமானதைக் கண்டு வருந்துகிறேன்!

சொல்லப்போனால் அவருக்கும் எனக்கும் 'காதல்' 'கீதல்' என்ற எண்ணம் ஒன்றுமில்லை. ஆனால் அவளையும் அவரையும் கூட அப்படி நினைத்துவிட்டேனே, அதுதான் தவறு! அதை இன்று பிரத்யட்சமாக உணர்ந்து வருகிறேன்.

அன்றைய என் அறியாமை - விளையாட்டு-இன்று இரு உண்மை உள்ளங்களின் வேதனைக்குக் காரணமானதை அறிந்து வருந்துகிறேன். எங்களிருவரைப் போலவே, அவர்களிருவரையும் எண்ணிவிட்டேனே, அதற்காக வருந்துகிறேன்!

என் வாழ்நாளில் எவருக்குமே தீமை செய்ய நினைத்ததில்லை. ஆனால் இன்று குற்றவாளியாக என் மனமே என்னைத் தாக்குகிறது. பெண் புத்தி பின்புத்தியாகிவிட்டதே என்று வருந்துகிறேன்.

பிறர் என்னை கண்டிக்கவேண்டிய அவசியம் இல்லை. சம்பந்தப்பட்ட அவர்களிருவரும் கூட, தம் விதியை நினைத்து, பெருந்தன்மையுடன் கண்டிக்கமாட்டார்கள். ஆகவே யாருடைய மன்னிப்பும் எனக்குக் கிடைக்காது. அப்படியானல் நானே என் மனதை ஆறுதல் செய்துகொள்ளவேண்டுமா?




"அவர் ஊரிலிருந்து திரும்பினர். அவளின் விவாகப் பேச்சுகள் என்னவாயிற்றென்று [பதட்டமுடன் விசாரித்தார்."

ஆம்; "எவர் தமது தவறுதல்களை மனப்பூர்வமாக உணர்ந்து வருந்துகிருர்களோ, அவர்களை ஆண்டவன் மன்னிப்பார்; அவர்களுக்குத்தான் மனசாந்தியும் உண்டு!" என்று மகான்கள் சொல்லுகிருர்கள்; எனக்கும் அதுதானே வழி? அதனுல் நானும் வருந்துகிறேன்! என் பிழையால் ஏற்பட்ட விளைவை மாற்றுவதற்கல்ல!

அதுதான் மாற்றமுடியாத ஒன்ருகிவிட்டதே!

ஃ ஃ ஃ

நான் வேலைக்குச் சென்ற இடத்தில் 'அ' எனது அந்தரங்கத் தோழியானுள். ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் இருவரும் உல்லாசமாக உரையாடுவோம். நாளடைவில் இந்த நேசம் வளர்ந்து நெருங்கிய பிணைப்புள்ள தாக்கிற்று.

'ஆ' என்பவர் அவளின் நண்பர். அடிக்கடி சந்திப்பார்களாம். இனிமையாகப் பேசுவாராம். அழகான கருத்துரைகளை அடுக்கடுக்காக எடுத்துரைப்பாராம். அவர் சினேகத்தைப் பெருமையாகப் பேசிக்கொண்டேயிருப்பாள் எப்போதும்.

அவர் நான் வசிக்கும் தெருவில்தான் குடியிருந்தார். வெகு காலமாக அவரை எனக்குத் தெரியும். ஆனுல் இவ்வளவு சிறப்புடையவர் என்று தெரியாது. அதனுல் அவருக்கும் எனக்கும் நேரடியான பழக்கமோ, தொடர்போ இல்லை.

எனினும் தோழியிடம் விட்டுக்கொடுக்கமாட்டேன். 'உனக்கு முன்பே எனக்கு அவரைத் தெரியும்!' என்பேன். பெண் பௌருஷம்தான். ஒருவரை நீண்ட காலம் தெரியும் என்பதனுலேயே அவரைப் பற்றி எல்லாம் தெரிந்துவிடாது. திடீரென்று சந்திக்கும் இருவர் இதய ஐக்கியம் பெற முடியாது என்றும் சொல்வதற்கில்லை. ஆனுல் எனக்கு இதெல்லாம் தெரியாது.

அவளிடமே ஆர்வத்தை மூட்டி அவரைப் பற்றி எல்லாவற்றையும் தெரிந்துகொண்டேன். அவள் அவருடன் பேசும் முறைகள், உபசரிக்கும் தன்மைகள், பிடித்தவை - பிடிக்காதவை; எல்லாம் தெரிந்து கொண்டேன்.

அவரோடு பழக எனக்கும் ஆசையாக இருந்தது. ஆகவே அவளைவிட அன்பைக் காட்டி அவரின் அன்பைப் பெற்றுவிட்டேன். எனக்கு அவர்களின் நட்பைக் கெடுக்கும் எண்ணம் இல்லை; நானும் அவரின் அரிய நண்பர்களிலொருவள் என்று சொல்லிக் கொள்ளத்தான் விரும்பினேன்.

'அவரைப் பற்றி உனக்குத் தெரியாததுகூட எனக்குத் தெரியும்!' என்று பெருமையடித்துக்கொள்ள எவ்வளவு பாடுபட்டேன். அதில்தான் எவ்வளவு சந்தோஷம் இருந்தது?

ஃ ஃ ஃ

என் அன்பு வெறும் அன்பு; சகோதர அன்பு! ஆனுல் அவர்களிருவரிடையே காதலன்பு இருந்தது. 'இருந்தது' என்று நிச்சயமாகவும் என்னுல் அப்போது நினைக்க முடியவில்லை. இருவரும் தனித்தனியே என்னுடன் நன்ருகப் பழகுகிருர்களே, இருந்தால் யாராவது சொல்லியிருக்கமாட்டார்களா?

'அ'வும் 'ஆ'வும் வெவ்வேறு வகுப்பினர். ஜாதிமுறையை ஒதுக்கி திருமணம் செய்துகொள்ளுவார்கள் என்பதை என்னுல் நினைத்துக்கூட பார்க்கமுடியவில்லை. அவரவர் ஒழுக்கத்திற்கும், அந்தஸ்த்திற்கும் ஏற்றபடி அவரவர் குலத்திலேயே கல்யாணம் செய்துகொள்ளலாம். அதற்குரிய மதிப்பும் செல்வாக்கும் அவர்களிடம் இருந்தன. அதனுல் காதலில் ஈடுபட்டு கலப்பு மணம் புரிய முன் வருவார்களா என்பது என் சந்தேகம்.

வேறுவிதமாகவும் நினைக்க முடியவில்லை. அதாவது காமத்திலீடுபட்டு கள்ள உறவு பூணுகிருர்களா என்று. ஏனெனில் இருவரிடமும் பழகியதிலிருந்து, அப்படிக் கேவலமானவர்களாயும் எண்ண முடியவில்லை.

ஒருவேளை அவர்கள் தங்கள் காதலை வெளியிட அஞ்சுவதாயிருந்தால்? அப்படியும் இருக்குமா? சின்னஞ் சிறுசுகள்! அவர்களாகக் கூருவிட்டாலும் நானுகவாவது கேட்டு, ஒன்றுசேர்த்து வைத்திருக்கலாம். ஆனுல் நானும் விவாகமாகாத சிறுமிதானே? தவறிவிட்டேன். அதாவது தவருன வழியில் போய்விட்டேன். அவர்கள் வாயிலிருந்தே உண்மையை வரவழைக்கவேண்டும் என்று குறுக்கு வழியில் சென்றுவிட்டேன்!

நல்ல சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி நன்மைசெய்து புண்ணியம் பெற்றிருக்க வேண்டிய நான், இந்த இடத்திலிருந்து தான் தவறிவிட்டேன்.

ஃ ஃ ஃ

'அ'வைப் பெண் பார்க்க வந்திருந்தார்கள். நிச்சயதார்த்தம் கூட நடைபெற்றுவிடும் போலிருந்தது. அந்த சமயத்தில் அவசர காரியமாக 'ஆ' வெளியூர் போனுர். போகும்போது எங்கள் வீட்டிற்கு வந்து சொல்லிவிட்டுப் போனுர். 'அ'விடம் சொல்லச் சொன்னுர்.

"பாவம்! என் கல்யாணப் பேச்சு அவருக்கு வருத்தமாக இருக்கும் போலிருக்கு! மன அமைதிக்காக வேண்டுமென்றே வெளியூர் போய்விட்டார்" என்று கூறினுள் அ.

உண்மை அன்பு கொண்டு தோழிக்கு உதவி புரிய எண்ணியிருந்தால் இதை நான் சரியானபடி புரிந்துகொண்டிருக்க வேண்டும். ஆனுல் அப்போதும் எனக்கு வீம்புதான் தோன்றியது. "அப்படியெல்லாம் அவருக்கு ஒன்றுமில்லை. 'உன் கல்யாணத்திற்கு நல்ல டிஸைனில் பத்திரிகைக் கார்டு வாங்கி வர வேண் வேண்டும்' என்றுதான் சொல்லிப் போனுர்!" என்றேன். பச்சைப் புளுகு! ஆனுல் அந்தக் 'குறத்தி' அப்போதும் விஷயத்தை வெளியிடவில்லை. மனதிற்குள்ளாகவே புழுங்கினுள்.

அவர் ஊரிலிருந்து திரும்பினர். அவளின் விவாகப் பேச்சுகள் என்னவாயிற்றென்று பதட்டமுடன் விசாரித்தார். நான் அருகிலிருப்பதால் அவளைப் பார்க்கும் முன்பே என் மூலம் விஷயத்தைத் தெரிந்துகொள்ள முயன்ருர். "யாருடைய வருகைக்காகவோ முடிவை இரண்டு நாள் ஒத்திப் போட்டிருக்கிருர்களாம்!" என்று தெரிவித்தேன்.

"சமூகத்திலே இஷ்டமில்லாத பலவந்தக் கல்யாணங்களினுல் எத்தனை இளம் பெணகள் கஷ்டப்படுகிருர்கள்" என்ருர் அவர். இதற்கென்ன அர்த்தமோ? இந்த சமயத்தில் ஏன் சொல்லவேண்டுமோ?

"அதைப்பற்றியவரை அந்தக் கவலை இல்லை. மாப்பிள்ளை அவளுக்குப் பிடித்துவிட்டது. நிச்சயதார்த்தப் புடவையைக்கூட கலர் பார்த்து சந்தோஷமுடன் 'சாங்ஷன்' செய்துவிட்டாள்!" என்றேன். நான் சொன்னதில் பாதிக்கு மேல் உண்மையிருந்தது. 'அ' அப்படி நடந்து கொண்டதை நான் கண்ணுரக் கண்டேன். ஆனுல் அது போலி நடிப்பு என்பது பின்னர்தானே எனக்குத் தெரிய வந்தது.

என் அபிப்பிராயம் அவரின் ஆசைக் கனவுகளைத் தகர்த்திருக்க வேண்டும். வருத்தக் குறியுடன் மௌனமாக எழுந்து சென்றுவிட்டார். மனதிலுள்ளதை என்னிடம் சொன்னுல் குடியா முழுகிவிடும்?

"உங்கள் பேரில்தான் எனக்கு ஆசை. வேறு எவரையும் மணக்கமாட்டேன்." என்று 'அ' முன்வந்தால் அதை ஏற்கத் தயாராக இருந்தார் ஆ!

"உன்னைத் தவிர வேருெருவளைக் கண்ணெடுத்தும் பாரேன்!" என்று அவராக வந்து வேண்டிக் கொள்ளுவதாக இருந்தால் அதை அங்கீகரிக்கத் தயாராக 'அ' இருந்தாள்.

இதற்கிடையே கல்யாணப் பேச்சு வேறு முடியும் தருணத்திலிருந்தது. எனக்கு ஒரே வேடிக்கை!

ஃ ஃ ஃ

கடைசியில் அறியாமையினுல் எழுந்த விளையாட்டு வினையாகி விட்டது. அவளுக்குக் கல்யாணம்.

"என்மீது எவ்வளவு பட்சமாக இருந்தாள். ஏமாந்து கைவிட்டுவிட்டேனே" என்று வருந்த ஆரம்பித்தார் ஆ.

"என் மீது எவ்வளவு பிரியம் வைத்திருந்தார். அவரை அந்தரத்தில் விட்டுவிட்டு விலகிப் போகிறேனே!" என்று சங்கடப்பட்டாள் அ.

பிறகு பெண்மைக் குரிய தனித்த கம்பீரமுடன் தனக்குத்தானே சமாதானம் சொல்லிக்கொள்ள முயன்ருள். அதாவது நான் அவரை விரும்புகிறேனும்; அவரும் என்னைத்தான் இச்சிக்கிருராம்! வெறும் கற்பனை! ஜோடனை!

நிர்பந்தத்தினுல் வேண்டா வெறுப்பாக விவாகம் செய்துகொள்வது உண்மையானுல், அப்போதே இதை என்னிடம் கேட்டுத் தொலைப்பதுதானே? 'ஆ'வை விரும்பியது உண்மையானுல் அவரிடமாவது வெளிப்படையாகக் கேட்டுத் தெரிந்துகொண்டிருக்கலாமே?

எப்படியோ அவள் பொய்யாகவேனும் ஆறுதல் பெற்றுக்கொள்ளுகிருள். 'விதிக்கு நாமென்ன செய்யலாம்?' என்று சமாதானம் அடைகிருள். ஆனுல் பகுத்தறிவை நம்பும் அவர்?

(12-ம் பக்கம் பார்க்க)

அண்டையில்:

# பாகிஸ்தானில் நாஜிஸ ஆட்சியா!

## லீகைத் தவிர யாருக்குமிடமில்லை

## அடக்குமுறை அட்டகாசம்

நாஜியத்தை வெறுத்து எதிர்த்தவர்களெல்லாம் இப்போது நாஜிக்களைப்போல நடித்து வருகிறார்கள். உலகில் பல பாகங்களிலும் இக்கூற்று நடைபெற்று வருகிறது. சர்வாதிகாரம் நடைபெறுகிற இடங்களிலெல்லால் நாஜிசம் தாண்டவமாடுகிறதென்று சொல்லவேண்டியதுதானே.

### நாஜி நாஜிமுதீன்

கிழக்கு வங்காள பிரதமர் குவாஜா நாஜிமுதீன் நாஜீயம் உலகத்திலிருந்து மறைந்து விடாமல் காப்பவர்களில் ஒருவராகக் காணப்படுகிறார். சென்ற சில தினங்களுக்கு முன் வங்க மாஜி பிரதமர் சுரவர்த்தி கீழ்வங்கத்திற்குச் சென்ற போது கைது செய்யப்பட்ட விஷயம் உங்களுக்கெல்லாம் தெரியும். சமரசத் தூதராக பிரசாரம் செய்யச்சென்றார். பாகிஸ்தானைச் சேர்ந்த கீழ்வங்கபீடபூமியில் கால்வைத்தாரோ இல்லையோ, சிறைவைக்கப்பட்டார் நாட்டை விட்டு உடனே கிளம்பிவிட்டால் விடுதலை செய்வதாகவும் உத்திரவு போட்டார்கள். பாவம்! என்ன செய்வார் சமரசத்தூதர். பேசாமல் ஊர் திரும்பினார்.

அடாபிடியாக கைது செய்தது நீதியா, நியாயமா என்பது ஒருபுறமிருக்கட்டும் கைது செய்யும்படி உத்திரவுபோட்டகீழ்வங்க பிரதமர் குவாஜா நாஜிமுதீன் கூறும் விளக்கம்தான் ரொம்பவும் விசித்திரமானது. மேற்கு வங்கத்திலிருந்து ராஜாஜியின் பயங்கர (?) நிர்வாகத்தில்வாழ முடியாமல் முஸ்லிம்கள் ஏகப்பட்டபேர் கிழக்கு வங்கத்தில் கூட்டங்கூட்டமாகவந்து விழுகிறார்களாம். அவைகளை எல்லாம் மூடி மழுப் பிபிரசாரம்செய்ய சுரவர்த்தி வந்திருப்பதாக காரணம்கூறி கைது செய்ய உத்திரவிட்டார் பிரதமர் நாஜிமுதீன்.

### சுஹ்ராவர்த்தி அறிக்கை

இதன்பிறகு ஜனாப்சூரவர்த்தியே அறிக்கை விட்டார். இன்னும் பல முஸ்லிம்ஸ்தாபனங்களும் அறிக்கை விட்டன. அவைகளிலிருந்து உண்மை தெரியவந்தது. நாஜிமுதீன் ஆட்சியில் நாஜி ஆட்சியைப்போல அவதிகளிலிருப்பதால் இந்துக்கள் மட்டுமல்ல, முஸ்லிம்களும்கூட நாட்டைவிட்டு மேல்வங்கத்திற்குச் சென்று கொண்டிருப்பதாகவும் இதை நிறுத்தவும், ஒரு சமரசமான சூழ்நிலை ஏற்படுத்தவுமே ஜனாப் சூரவர்த்தி அங்கு சென்றார் என்று அறிய முடிந்தது.



### நாஜிமுதீன் மழுப்பல்

சென்றவாரம் நடைபெற்ற கீழ்வங்க சட்டசபையில் மேற்படி விஷயம் ஊர்ஜிதமாயிற்று. சட்டசபையில் கேட்ட ஒரு கேள்விக்கு நாஜிமுதீன் கூறியபதிலில் 'ஆகஸ்டு 15ந் தேதியிலிருந்து எவ்வளவு பேர் நாட்டை விட்டு ஓடிவிட்டார்களென்ற விபரங்கள் கையிலில்லையென்றும், சேகரிக்க வேண்டுமானால் ரொம்பவும் கஷ்டமும், செலவும் ஆகுமென்றும்; சர்க்கார் இவ்விபரங்களை சேகரிக்க தயாராகயில்லையென்றும்' தெரிவித்தார்.

### சுவர்க்கமா, நரகமா

மைனாரிட்டி மக்களுக்கு பிரத்தியேக பாதுகாப்புகளும், சலுகைகளும் கொடுத்து சுவர்க்கலோகத்தில் வாழுவதைப்போல பாகிஸ்தான் செய்து கொடுக்குமென்று முன்பெல்லாம் ஜனாப் ஜின்னா கூறினார். ஆனால் நிலைமை தலைகீழாக மாறிவருகிறது. பாகிஸ்தானுக்குச் சென்ற முஸ்லிம்கள் தங்கள் பழய ஊரே மேலானதென்று திரும்பி வருகிறார்கள். இதனால் இந்திய டொமினியனிலுள்ள அரசாங்கங்களுக்கு புதிய சங்கடமேற்பட்டு வருகிறது. பாகிஸ்தானிலிருந்து வரும் இந்துக்களுக்கு மட்டுமல்ல முஸ்லிம்களுக்கும் வசதி செய்வதென்றால் லேசான விஷயமா?

### கபார்கானுக்கு அவமதிப்பு

அப்துல் குயாம்கான் தலைமையில் நடைபெற்றுவரும்வடமேற்கு எல்லை மாகாண சர்க்கார் கான் அப்துல் கபார்கானை கைது செய்து மூன்று வருட கடுங்காவல் தண்டனை விதித்தனர். கபார்கான் இப்பி பக்கிரியுடன் சேர்ந்துக்கொண்டு எல்லையில் குழப்பம் உண்டுபண்ண சதிசெய்வதாக அபாண்டமான குற்றம் சாட்டப்பட்டார். இக்காரணம் ஒரு கண் துடைக்கும் கருத்தே. ஆனால் உண்மை காரணம் என்னவென்றால் கான் சாயபு மக்கள் கட்சியென ஒரு கட்சியை பாகிஸ்தானில் ஆரம்பித்திருக்கிறார். இக்கட்சி வர வர பொதுஜன ஆதரவுபெற்று வருகிறது. இதை பாகிஸ்தான் தலைவர்கள் அச்சங்கொண்டு அடியோடு வெறுக்கிறார்கள். பாகிஸ்தானில் எக்கட்சியும் கூடாது, ஒரே ஒரு கட்சிதான் இருக்க வேண்டுமென்பது ஜனாப் ஜின்னா சாயபு உள்பட எல்லா தலைவர்களும் விரும்புகிறார்கள். முஸ்லிம் லீகுக்குதான் இடமுண்டு ஆகவே கான் சாயபுவை அமுக்கிவிட்டதில் ஆச்சரியமில்லை. இன்னும் பலரையும் கைது செய்து வருவதாக செய்திகள்வருகின்றன

காந்தீயத்தை முழுதும் ஏற்று பின் பற்று பவர்களில் இவரை முதல் இடத்தில் வைக்கலாம். மகாத்மாவின் பிரியமான சிஷ்யர். இப்படிப்பட்டவர்கூட சந்தேகிக்கப்பட்டு குற்றம் சாட்டப்படுகிறார் என்றால் பாகிஸ்தான் மற்ற யாரைத்தான் நம்பச் செய்யுமோ தெரியவில்லை.

### செல்லாத வக்காலத்து

பாகிஸ்தான் விஷயத்தைப்பற்றி இந்திய டொமினியனிலுள்ள நமக்கு கவலையில்லை. அதைப்பற்றி பேசுவதும் நியாயமாகாது. ஆனால் பாகிஸ்தான் தலைவர்கள் சும்மாயிருக்கவில்லையே. அவர்கள் செய்யும் காரியங்கள் நம்மை ஏதாவது சொல்லும்படியாகத்தானே தூண்டுகிறது. இந்திய டொமினியனிலுள்ள 4½ கோடி முஸ்லிம்கள் ரொம்பவும் அவதிப்படுவதாகவும், அவர்கள் விஷயத்தை அலட்சியம் செய்ய முடியாதென்றும் இடையிடையே பாகிஸ்தான் தலைவர்கள் சொல்லி வருகிறார்கள். இப்படி சொல்வதற் கெல்லாம் காரணம் இந்தியமுஸ்லிம்கள் இங்கு சுகமாகயிருக்கிறார்களே, பாகிஸ்தான் வேண்டுமென்று வாங்கி பாழடைந்து வருகிறோமே, இந்தியாவில் மட்டும் அமைதி ஏற்பட்டுவிட்டது. எப்படியாவது இந்திய யூனியனிலும் ஒரு கிளர்ச்சி வேகத்தை கிளப்பிவிட்டால் பாகிஸ்தானிலுள்ள ஊழல்களை மறைத்துவிட முடியும் என்ற எண்ணத்தால் பாகிஸ்தான் தலைவர்கள் இப்படி செய்கிறார்கள்.

### ஆங்கிலோ-இந்தியர்

சென்றவாரம் ஒரு கூட்டத்தில் பேசிய ஆங்கிலோ இந்திய தலைவர் கூறிய அபிப்பிராயம் இங்கு கூறுவது ரொம்பவும் பொருத்தமாகயிருக்கும். அவர் கூறினார் 'பாகிஸ்தானில் மைனாரிட்டிகளாகயிருந்து வரும் ஆங்கிலோ இந்தியர்களின் நிலவரம் வரமோசமாகி வருகிறது. அவர்கள் அலட்சியம் செய்யப்படுகிறார்கள். பொருளாதார நிலையில் அவர்கள் சீர்குலைந்துவருகிறார்கள். பலவகையிலும் சங்கடங்களுக்கும் ஆளாகிறார்கள். இந்நிலையில் அங்கு எவ்வளவு காலம் வாழ முடியுமோ என்ற பயம் ஏற்பட்டுவருகிறதாம். அங்கு அகப்பட்டுக்கொண்டு அவதிப்படும் ஆங்கிலோ இந்திய சகோதர, சகோதரிகளுக்கு எவ்விதம் உதவி செய்ய முடியுமென்ற பிரச்னை ஆங்கிலோ இந்திய தலைவர்களை ஆட்டிவருகிறது.

### பட்டாணிகளும், பத்திரிகைகளும்

பாகிஸ்தானிலுள்ள பட்டாணிகளும் பாகிஸ்தான் நிர்வாகத்தை வெறுத்து வருகிறார்கள். கான் அப்துல் கபார்கான் சமீபத்தில் கூறிய அபிப்பிராயம் அங்கு இருந்துவரும் வேகத்தை வெளிப்

(10-ம் பக்கம் பார்க்க)


# புதிய தொடர் கதை

## தீ! தீ! தீ!...

★ தீயின் செந்நாக்குகளின் பகைப்புலத்தில் குமுறிய உள்ளங்கள் எத்தனை! உள்ளங்கள் உந்திய உணர்ச்சிச் சூறைகள் எத்தனை ரகங்கள்!

★ சமுதாயத்திலே மேல் மினுக்காகத் திரியும் உருவங்களின் உள்ளத்துப் போராட்டங்களை, அவற்றின் விளைவான சம்பவங்களை, அவற்றை நிகழ்த்தும் குணச் சித்திரங்களை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது திடீரென வெடித்த தீ!

★ ஆனால், குற்றங்கள், தவறுகள், அநீதிகள் அனைத்தையும் திரையிட்டு விடுகிறது கவிந்து வந்த மூடுபனி.

★ புதிர் ஒன்றுமில்லை! சுவையான சம்பவங்களோடு வளரப் போகும் புதிய தொடர் கதை தெளிவாக்கும்.

4-7-48

'சிவாஜி' இதழில் ஆரம்பமாகிறது

'மூடுபனி'

எழுதுபவர்: வல்லிக்கண்ணன்.

# சிவாஜி

அறவலி காத்து நாளும் அன்னையின் பணிக்கென்றே நம்
உறையிலே உறங்கும் வீரம் உருவினோம் ஓங்கிவிட்டோம்.


திருச்சி, 20—6—48

## காஷ்மீர்

காஷ்மீர் சம்பந்தமான தகராறுக்கு முடிவுகாண ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கௌன்சிலால் நியமிக்கப்பட்டுள்ள கமிஷன் இந்தியாவுக்கு வரும் மார்க்கத்தில் ஜினீவாவில் தங்கி ஆலோசனைகள் செய்திருக்கின்றது.

சமீபத்தில் இந்தக் கமிஷனின் பரிசீலனை அதிகாரங்களை அதிகமாக்குவதாக பாதுகாப்பு கௌன்சிலால் பிரஸ்தாபிக்கப்பட்டது. காஷ்மீர், ஜம்மு விஷயங்கள் தவிர ஜுனாகாத் விவகாரத்தையும் இந்தக் கமிஷன் கவனிக்கலாம் என்ற யோசனை தெரிவிக்கப்பட்டது.

இந்த யோசனையை எதிர்த்து பாதுகாப்பு கௌன்சிலுக்கு நமது பிரதமர் பண்டித நேரு ஒரு தந்தி கொடுத்திருந்தார். இந்த தந்திக்கு கிடைத்திருக்கும் பதில் சற்று ஆறுதல் அளிப்பதாய் இருக்கிறது.

முன்பு பாகிஸ்தான் இந்திய தகராறு சம்பந்தமான பழைய விவாதங்கள் பாதுகாப்பு கௌன்சில் கூட்டத்தில் நடந்த காலத்தில் காஷ்மீர் அல்லாத ஏனைய பிரச்னைகள் பற்றியும் இந்தக் கமிஷன் பாதுகாப்பு கௌன்சில் உத்தரவிடும்போது பரிசீலனை செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் பின்னர் நடந்த நடவடிக்கைகளிலிருந்து காஷ்மீர் அல்லாத ஏனைய இந்திய-பாகிஸ்தான் பிரச்னைகளைப் பாதுகாப்பு கௌன்சில் அமுக்கியமென்று ஒதுக்கிவிட்டதுபோல் தோன்றிற்று.

ஆனால் திரும்பவும் இந்த பிரச்னைகள் முளைத்துவிட்டதாகத் தெரிய வந்தது. கடைசியாக பண்டித நேருவின் தந்திக்கு வந்திருக்கும் பதிலிலிருந்து பாதுகாப்பு கௌன்சில் சற்று ஜாக்கிரதையாகவே நடந்துகொள்கிறது என்று தெரிய வருகிறது.

காஷ்மீருக்கு வரவிருக்கும் கமிஷன் வக்ரபுத்தியுடன் நடந்து கொள்ளாமல் உருப்படியாக ஏதாவது செய்ய முயலவேண்டும் ஆனால் உருப்படியாகவேலைசெய்ய ஆரம்பித்தால் நேர்மையாக எழுந்த முடிவுகளுக்குத்தக்க பரிகாரத்தை உடனே அமல் நடத்த முயல வேண்டியிருக்கும். இந்தப்பரிகாரம் கட்டாயம்பாகிஸ்தானுக்கு விரோதமாகவே இருக்கவேண்டியிருக்கும் ஆனால் பாகிஸ்தானுக்கு எதிராக பாதுகாப்பு கௌன்சிலின் போர்வைக்குள் ஒளிந்திருக்கும் வல்லரசுகள் நடவடிக்கை எடுக்க சம்மதிக்குமா?

அப்படித் தோன்றவில்லை. எனவே காஷ்மீர் கமிஷன் தவறாக நடந்துகொண்டால் இந்தியாவின் அலட்சியத்துக்கும், நேர்மையாக நடந்துகொண்டால் பாகிஸ்தான், பாதுகாப்பு கௌன்சில் இவற்றின் அலட்சியத்துக்கும் ஆளாகவேண்டியிருக்கும்!

கமிஷன் என்ன செய்யப்போகிறது என்பதைக் காத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

## ஹைதராபாத்

இந்தத் தலையங்கம் எழுதப்படும் சமயத்தில் இருக்கும் நிலைமையை கவனிக்கும்போது இந்திய - ஹைதராபாத் சமரசத்துக்காக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட உடன்படிக்கை நகல் ஹைதராபாத் அரசாங்கத்தால் ஒப்பப்படவில்லை என்பதுடன், சமரச முயற்சி இங்ஙனம் தோல்வியடைவதையே ஹைதராபாத் வகுப்புவாதிகள் விரும்புவது போலவும் தெரிகிறது.

இந்த நகலில் சில திருத்தங்கள் செய்யமுடியுமானால்தான் சமரசம் சாத்தியமாகுமென்று ஹைதராபாத் நினைக்கிறதாம். ஆனால் டில்லியிலிருக்கும் ஹைதராபாத் தூதுகோஷ்டி அங்கத்தினர்கள் மாங்கட்டையும், வெங்கட்ராம ரெட்டியையும் உடனே திரும்பி அழைத்துவர ஒரு விமானம் அவசரமாக அனுப்பப்பட்டிருப்பதைப் பார்த்தால் இந்த திருத்தங்களை இந்திய அரசாங்கம் ஏற்காது என்ற யுக்தியுடனேயே அவை அனுப்பப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது.

## பர்மாவில்

பர்மாவில் பிரதமர் தாகின்நூ அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இடதுசாரி ஐக்கியத் திட்டம் நாட்டுநிலையை நன்குணர்ந்ததாகவும், உருப்படியான சீர்திருத்தம் செய்து பொருளாதாரத்தை பலமான அடிப்படையில் உருவாக்கவேண்டும் என்ற அக்கரையுடனும் உருவாகியிருக்கிறது. தாகின் நூவின் துணிச்சலையும், ஆற்றலையும் நாம் பாராட்டுகிறோம்.

தாகின் நூவின் திட்டம் பிரிட்டிஷ் அரசியல் வட்டாரங்களை ஒரு கலக்குக்கலக்கியிருப்பது உண்மைதான் ஆனால் பர்மிய மக்கள் எந்தப் பாதையில் செல்ல முடிவு செய்தாலும் பிரிட்டிஷ் அரசாங்கம் அதற்குக் குறுக்கே நிற்பதும், இடைஞ்சல் செய்வதும் சாத்தியமாகாது என்பது மாத்திரம் உறுதி.

★

# சிறு குறிப்புகள்

### ராஜா சர் மறைவு

செட்டிநாட்டு ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் சென்ற பதினைந்தாம் தேதியன்று தமது செட்டிநாட்டு அரண்மனையில் காலமான சேதி வருந்தத் தரும் ஒரு சேதியாகும்.

ராஜாசர் அவர்கள் தமிழ்நாட்டின் வர்த்தக ராஜா என்று அழைக்கப்படத் தகுதியுள்ளவர். தமிழ்மொழியில் ஆர்வமிக்க அண்ணாமலை அவர்களின் அழியாத ஞாபகச் சின்னமாக விளங்கி வருவது அன்னாரால் சிதம்பரத்தில் 1929ல் ஸ்தாபிக்கப்பட்டு நடந்துவரும் அண்ணாமலை சர்வகலாசாலையே யாகும்.

கல்வி நிலையங்களுக்கும், வைத்திய சாலைகளுக்கும், இன்னும் பலதரப்பட்ட சமூக பொதுநல ஸ்தாபனங்களுக்கும் ராஜாசர் அவர்கள் செய்திருக்கும் நிதியுதவி போற்றத் தக்கது.

ராஜாசர் அவர்கள் பர்மா, இலங்கை மலேயா ஆகிய நாடுகள் முழுவதும் பிரயாணம் செய்ததோடல்லாமல் 1935-ம் ஆண்டில் பர்மா இந்தியர்களின் உரிமைகளைப் பாதுகாக்க லண்டன் சென்று திரும்பினார். அத்துடன் அமெரிக்கா, பெல்ஜியம், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளிலும் சுற்றுப்பிரயாணம் செய்தார். இலங்கை, மலேயா, கொச்சின் சீனா, பர்மா ஆகிய நாடுகளில் அன்னாரது வர்த்தக நலன்கள் பல பரவியிருக்கின்றன.

மேலும் அண்ணாமலை அவர்கள் இம்பீரியல் பாங்க் கவர்னர் பதவி, சட்டசபை கௌன்சில் அங்கத்தினர் பதவி ஆகிய பொறுப்புள்ள பதவிகளையும் வகித்தார்.

ராஜாசரின் மறைவு தமிழ்நாட்டுக்கு ஒரு பெரிய நஷ்டம் என்பதில் சந்தேகமில்லை. அன்னாரது கலையார்வமும், தரும சிந்தையும் நம்மை ஊக்குவிக்குமாக.

### எல்லைக் காந்தி

எல்லைக் காந்தி என்று புகழ்பெற்ற கபார்கான் அவர்களை எல்லைப்புற லீக் அரசாங்கம் கைது செய்து மேற்குப் பாஞ்சால சிறைக்கு அனுப்பியிருக்கிறது. பாகிஸ்தானிடம் எல்லைக் காந்திக்கு விசுவாசமில்லை என்றும், இப்பி பக்கிரியுடன் பாகிஸ்தானுக் கெதிராக சூழ்ச்சி செய்ய முயற்சித்தார் என்றும், பழைய காங்கிரஸ்காரர்களை ஒன்று சேர்த்து பாகிஸ்தான் நலனுக்குக் குந்தகமான ஒரு கட்சியை ஆரம்பித்தார் என்றும் அவர் பேரில் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

கபார்கான் ஆரம்பித்த புதுக் கட்சி பற்றி நேயர்களுக்கு நன்றாகத் தெரியும். ஜாதி பேதமற்ற ஒரு ஜனநாயகக் கட்சி அது. பாகிஸ்தானிடம் கபார்கானுக்கு விசுவாசமில்லை என்று கூறப்படுவதும் தவறு. எல்லைப்புறப் பட்டாணியர்களுக்கு பாக்கிஸ்தானுக்குள்ளேயே தனி அந்தஸ்து வேண்டுமென்பதே அவர் கொள்கை. பிரிட்டிஷாரின் அடிச்சுவட்டில் பின்பற்றி லஞ்சம், பயமுறுத்தல் இவை மூலம் எல்லைப்புற மலைஜாதியினரை அடக்கி வைக்கும் கொள்கையைப் பாகிஸ்தான் கடைபிடித்து வருகிறது. மனித கௌரவத்தில் நம்பிக்கையுள்ள கபார்கானின் கொள்கைக்கு இது எப்படி ஒத்துவரும்.

கபார்கான் கைது செய்யப்பட்டிருப்பது பாக்கிஸ்தான் சிறுபான்மையினருக்கும், ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ளவர்களுக்கும் கசப்பை உண்டாக்கியிருக்கிறது. இந்தச் செயலின் மூலம் பாகிஸ்தான் தன் பிரதேசத்தில் ஏற்கனவே முற்றியிருக்கும் குழப்பங்களை வளர்த்துக்கொள்கிறது.

### டேனியல் தாமஸ்

ராஜாசர் அவர்கள் மறைந்த தினத்தன்றே சென்னை மாகாண மந்திரிசபையில் மதுவிலக்கு மந்திரியாக வீற்றிருந்த கனம் டேனியல் தாமஸ் அவர்களும் நம்மைப் பிரிந்து சென்றுவிட்டார்.

திருநெல்வேலியில் பிறந்து வளர்ந்து சென்னை கிறிஸ்தவ, சட்டக் கல்லூரிகளில் பட்டம் பெற்று முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக திருநெல்வேலியில் வக்கீல் தொழில் நடத்திவந்தார் தாமஸ்.



பாளையங்கோட்டை நகரசபைத் தலைமை திருநெல்வேலி ஜில்லா போர்டு உபதலைமை, ஜில்லா கல்வி கௌன்சில் தலைமை, பன்னீராண்டுகள் சென்னை சட்டசபை கௌன்சில் அங்கத்தினர் பதவி, சென்னை சர்வகலாசாலை செனேட்டில் அங்கம் ஆகிய பதவிகளை வகித்து அனுபவம் பெற்ற திரு. தாமஸ் சென்ற பிரகாசம் மந்திரி சபையில் சேர்ந்து ஊழியம் புரிந்தார். புதிய மந்திரி சபையிலும் சேர்ந்து போக்குவரத்து, மதுவிலக்கு, பதிவு இலாக்காக்களின் பொறுப்பை வகித்துத் தொண்டாற்றினார். டாக்டர் சுப்பராயன் விலகிய பிறகு சட்ட இலாகாவும் அன்னாரது பொறுப்பில் வந்தது.

தாம் ஏற்று நிர்வகித்த இலாக்காக்களில் பல சீர்திருத்தங்கள் செய்து அரும்பணியாற்றினார் தாமஸ். அன்னாரது பிரிவால் வருந்தும் அனைவருக்கும் எம் அனுதாபங்கள்.

### டிவேலரா விஜயம்

ஐயர்லாந்தின் சுதந்திரப் போராட்டத்தை இந்தியா என்றும் மறக்க முடியாது. எனவே இப்பெரும் வீரப் போராட்டத்தின் மூளையைப் போல் திகழ்ந்த டிவேலராவையும் இந்திய மக்கள் மறக்க முடியாது. அவர் இந்தியாவில் இரண்டு நாட்கள் தங்கியிருந்தார் சமீபத்தில்.

சமீப கால ஐரிஷ் தேர்தலில் தோல்வியுற்ற டிவேலரா இப்போது ஐரிஷ் பிரி

# இந்தியாவின் உணவு நிலை

சமீபத்தில் வெளியாகியிருக்கும் உணவு தானியக் கொள்கை கமிட்டியின் இறுதி அறிக்கை ஐந்து அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முதல் அத்தியாயத்தில், 1943 முதல் 1947-ம வருஷம் வரையில் உணவுதானிய உற்பத்திவிஷயத்தில் செய்யப்பட்ட முயற்சிகளின் தன்மையும், பலனும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன; இரண்டாவது அத்தியாயம், உணவு உர்பத்தியை அதிகரிப்பதற்குள்ள வசதிகளை ஆராய்ந்து அடுத்த ஐந்து வருஷங்களில் உணவு உற்பத்திக் கொள்கையை எந்த ரீதியில் மாற்றியமைக்க வேண்டுமென்பதை எடுத்துக் கூறுகிறது; மூன்றாவது அத்தியாயத்தில் மாற்றியமைக்கப்பட்ட உணவு உற்பத்தித் திட்டத்தின் பிரதான அம்சங்கள் பற்றியும், அத்திட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்கு அமைக்கப்படவேண்டிய ஸ்தாபனம் பற்றியும் விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது; உப உணவுப் பொருள்கள் விஷயம்பற்றி நான்காவது அத்தியாயத்தில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஐந்து வருஷங்களில் அனுசரிக்க வேண்டிய உணவுக் கொள்கை பற்றிக் கடைசி அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

## உணவு உற்பத்தி இயக்கம்

1943 முதல் 47 வரை நடத்தப்பட்டு வந்த உணவு உற்பத்தி இயக்கத்தால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை என்று கமிட்டி கருதுகிறது. எடுக்கப்பட்டு வந்த நடவடிக்கைகள் என்னமோ சரியானவைதாம்; ஆனால் லட்சியங்கள் பலதரப்பட்டவையாயிருந்தன. எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகள் போதியனவாயில்லை. பல பிரதேசங்களில் உற்சாகமும் உத்வேகமும் போதிய அளவு காணப்படவில்லை. வருங்காலத்தில் உணவு உற்பத்தியில் நிச்சயமாகப் பலனேற்படவேண்டுமானால், இது விஷயத்தில் கையாளும் முறைகளைத் தீவிரமாக மாற்றியமைக்க வேண்டும். புதியதொரு கொள்கையை வகுத்து, அதை நிறைவேற்றி வைக்க புதியதொரு ஸ்தாபனத்தையும் அமைத்தாகவேண்டும்.

வாணிபப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுவந்த நிலங்களில் உணவுப் பொருள் சாகுபடி செய்வது, ஏற்கனவே சாகுபடி செய்யப்பட்டுவரும் நிலங்களில் பாசன வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலமும், உயர்ந்த ரக விதைகளையும், எருவகைகளையும் உபயோகிப்பதன் மூலமும் உற்பத்தியைப் பெருக்குவது விவசாயத்துக்கு லாயக்கான தரிசு நிலங்களை அபிவிருத்தி செய்வதன் மூலமும் விவசாயத்தை விஸ்தரிப்பது ஆகியவையே 1943—47ல் அனுசரிக்கப்பட்ட உணவு உற்பத்தி இயக்கத்தின் பிரதான அம்சங்களாகும்.

வாணிபப் பயிர்களுக்குப் பதிலாக உணவுப் பயிர் சாகுபடி செய்யப்பட்ட மாகாணங்களில் தினை சாமை வரையறு தானிய உற்பத்தியிலும் அரிசி உற்பத்தியிலும் காணப்பட்ட உயர்வு, பருத்தி, சணல் ஆகியவை உற்பத்தி விஷயத்தில் சில விஸ்தீரணத்திலும் உற்பத்தி அளவிலும் ஏற்பட்ட குறைவுக்கு ஈடு செய்வதாயில்லை என்று கமிட்டி அபிப்பிராயப்படுகிறது. அந்தக் கொள்கையின் விளைவாக பருத்தி, சணல் உற்பத்தியும் ஏற்றுமதியும் குறைந்தனவே யொழிய அதற்கு ஏற்றபடி உணவு உர்பத்தி அதிகரிக்கவில்லை. ஆகையால், வாணிபப் பயிர்களுக்கு பதிலாக உணவுப் பயிர்களை பயிரிடும் கொள்கையை தொடர்ந்து அனுசரிப்பது உசிதமா என்பதுபற்றி மாகாணங்களுடனும் சமஸ்தானங்களுடனும் மத்திய சர்க்கார் உடனே கலந்தாலோசிக்க வேண்டுமென்று கமிட்டி சிபாரிசு செய்கிறது.

## உற்பத்தியைப் பெருக்குவதற்குள்ள வசதிகள்

நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுக் குறைபாட்டின் தன்மையையும், உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்குள்ள வசதிகளையும் பரிசிலனை செய்கையில், இந்தியாவில் உணவு உற்பத்தி சப்ளை விஷயத்தில் பல ஆபத்துக்கள் நிறைந்திருப்பதாக கமிட்டி கருதுகிறது. அவற்றில் முதன்மையானவையாவன: உள்நாட்டில் உற்பத்தியாகும் உணவு தானியத்தின் சாரசரி மொத்த அளவு தற்போதுள்ள ஜனத்தொகையின் தேவைகளுக்குப் போதுமானதாயில்லை. வருஷாந்திர உற்பத்தி அளவ மூன்று வருஷத்திற்கொரு தடவை பெரிதும் மாறுபாடடைகிறது. நாட்டின் பல்வேறு பாகங்களிலும் 'பஞ்சப் பிரதேசங்கள்' என்று கூறப்படும் கடுமையான பற்றாக்குறைப் பிரதேசங்கள் சில இருந்துவருகின்றன. இந்தியாவில் விவசாய அபிவிருத்தி இந்நாட்டின் மூல வளங்களுக்கு ஏற்ப விருத்தியடையவில்லை என்றும், உற்பத்தியைப் பெருக்குவதற்கு நிறைய இடமிருப்பதாகவும் நிபுணர்கள் கூறுவதை கமிட்டி ஒப்புக்கொள்கிறது. நாட்டிலுள்ள பெரிய நதிகளில் பல காரியங்களுக்குப் பயன்படும் பெரிய அணைக்கட்டுகளை ஏற்படுத்துவதன் மூலந்தான் இந்திய விவசாயத் தொழில் பருவகால மழையையே முற்றிலும் நம்பியிருப்பதை ஓரளவுக்குக் குறைக்க முடியும். மேலும் இத்திட்டங்களின் மூலம் விஸ்தாரமான பிரதேசங்களுக்கு நீர்ப் பாசான வசதிகள் ஏற்பட்டு தானிய உற்பத்தியும் 20 முதல் 30 சத விகிதம் வரை உயரக்கூடும் என்று கமிட்டி கூறுகிறது. ஏற்கனவே சாகுபடி செய்யப்பட்டுவரும் நிலங்களில் நல்ல நீர்ப்பாசான வசதிகள் கொண்டும் மேலான உரங்களையும் விதைகளையும் உபயோகிப்பது மூலமும் மேலும் தீவிரமாகச் சாகுபடி செய்வதன் மூலமும் உற்பத்தியைப் பெருக்க முடியும்.

பற்றாக்குறைப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வது பற்றிக் குறிப்பிடுகையில, இப்பிரதேசங்களில் சீரமைப்புக்குப் பிரத்தியேகமானதொரு திட்டம் வகுக்கவேண்டுமென்று கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது. அதிக நீர்ப்பாசன வசதிகள் அளிப்பது, வானமாரிப் பயிர்

(அடுத்த பக்கம் பார்க்க)

---

வினையை ஒழித்து ஐக்கியம் உண்டாக்குவதற்காக சாம்ராஜ்ய நாடுகளில் பிரசார சுற்றுப்பிரயாணம் செய்தார்.

டிவேலராவுக்கு இந்தியாவிடம் அன்பும், அனுதாபமும் உண்டு. மகாத்மாவிடம் பக்தியும் உண்டு. கொடுமையான நெருக்கடிகளில் அயர்லாந்தின் கௌரவத்தையும், சுதந்திரத்தையும் பாதுகாத்த பெருமை டிவேலராவையே சாரும்.








## குஷ்ட நிவாரணி

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதமுள்ளது.

குஷ்டம் 18 வகையும செம்மேகப்பத்து, வெண்மேகம், கருமேகம், தடிப்பு, அரிப்பு, மதமதப்பு, விஷக்கடிகள், குழிப்புண்கள் எல்லாம் நீங்குகிறது. 50 வேளை செட் ரூ. 10—0—0

வைத்திய பதி

**R. M நாராயணசாமி பிள்ளை,**
தனவந்திரி வைத்தியசாலை, பழனி, S. I.

**நற்சாக்ஷி.**

கனம் தங்கிய வைத்தியர் அய்யா அவர்களுக்கு:

எனது சகலை கோயமுத்தூரிலிருந்து வந்து தங்களிடம் மருந்து சாப்பிட்டார் 10 வருஷமாக எவ்வளவோ மருந்துகள் சாப்பிட்டும், ஊசிகள் போட்டும் தீராமலிருந்த குழிபுண்கள் தினம் 20 தடவை நீர் போகுதல், கால் வீக்கம் யாவும் 3 வேளையில் ஆச்சரியப்படும்படியான முறையில் சுகமாகி விட்டது. நடக்க முடியாமலும், மதமதப்பாகவும் இருந்த கால்களில் சுரணை ஏற்பட்டு நடக்க முடிகிறது. முதுகு பூராவும் லேசாக எரிகிறதாகச் சொன்னார். இம்மருந்தின் பெருமையை வாயால் புகழுவதற்கில்லை. இதற்கு நிகரான மருந்தே இல்லையென உறுதியாய்க் கூறுகிறேன்.

(ஒப்பம்) ஜி. கிருஷ்ண ராவ்,
ஹெட் போஸ்டுமேன், பழனி.


### சிறுகதைப் போட்டி:

பிரதி வாரமும் சிவாஜியில் சிறுகதைகள் வெளியாகும். ஒரு மாதத்தில் வெளியாகும் சிறு கதைகளில் சிறந்தவைகளுக்கு ரூ. 5 முதல் ரூ. 20 வரை ஆசிரியர் உசிதப்படிபரிசளிக்கப்படும்

ஒவ்வொரு ஆங்கில மாதம் 2-வது வார இதழுடன் பாலர் அனுபந்தம் ஒன்று வெளியிடப்படும். சின்னஞ் சிறு கதைகள் அனுப்பலாம். முதல பரிசு ரூ. 5. இரண்டாம் பரிசு ரூ. 4 இது தவிர பிரசுரிக்கப்படும் மூன்று கதைகளுக்கு 4 வார சிவாஜி இதழ்கள் இலவசம், சிறு பாடல்கள் அனுப்பலாம். முதல் பரிசு ரூ. 3. இரண்டாவது பரிசு ரூ. 2. இப்போட்டிக்கான விஷயங்கள் ஒவ்வொரு ஆங்கில மாதம் 4-ம் தேதிக்குள் அனுப்பிவிடவேண்டும்.

பெயர் ..............................
விலாசம்..............................
போட்டியின் பகுதி ..................

# திருச்சி தேவர் மறைவு

## கலைவாணர் தம்பதிகள் அனுதாபம்

திருச்சி பி. ஆர். தேவர் அவர்கள் மறைவு பற்றி கலைவாணர் திரு என். எஸ் கிருஷ்ணன் அவர்களும், திருமதி டி. எ. மதுரம் அவர்களும் பின்வரும் அனுதாப செய்தியை அனுப்பியிருக்கிறார்கள்:—

தமிழ் வீரத்திற்கும், நேர்மைக்கும், பொதுப்பணிக்கும் நந்தா விளக்காக இலங்கி வந்த, திருச்சி ரெத்தினவேலு தேவர் அவர்களின் மறைவு, குறிப்பாக திருச்சி வாசிகளுக்கும், தமிழர் அனைவருக்கும் மகத்தான நஷ்டமாகும். இவருடன் பழகும் பேறு பெற்ற எங்களைப்போன்றோர்கள் "இவ்வளவு மெல்லிய உடலுக்குள்ளே எவ்வளவு கெட்டியான, அழுத்தமான உறுதியான நெஞ்சம் அடங்கியிருக்கிறது" என்று ஆச்சர்யப்படாமலிருக்க முடியாது.

எவ்வளவு மேதாவியாயிருந்தாலும் வெட்டொன்று, துண்டு இரண்டு என்ற முறையில் நியாயத்தைப்பேசும் பிறவிக்குணம் படைத்தவர் நமது தேவர். ஏழை மக்களுக்கு எல்லா உதவிகளையும் செய்து கொடுக்கும் இயல்புடையவர். இப்பெரியாரின் பிரிவால் வருந்தும் வயோதிகத்தாயாருக்கும் மக்களுக்கும் எங்கள் மனப்பூர்வமான அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*N. S.* கிருஷ்ணன்
*T. A.* மதுரம்

## உணவு நிலை

(முன் பக்க தொடர்ச்சி)

சாகுபடி செய்வது, விவசாயத்தில் ஈடுபட இயலாதபோது வேறு வேலை பார்ப்பதற்கு வசதியாக சிறு கைத்தொழில்களை ஏற்படுத்துவது ஆகியவை அத்திட்டத்தில் அடங்கியிருக்க வேண்டுமென்று கமிட்டி கூறுகிறது. பம்பாய் சர்க்கார் சமீப காலத்தில சுமார் 7 லட்சம் ஏகரா நிலத்தை வானமாரிப் பயிர் சாகுபடிக்குத் தயார் செய்திருப்பதை சுட்டிக்காட்டி, மற்ற மாகாணங்களும் சமஸ்தானங்களும் இம் முறையைப் பின்பற்றவேண்டு மென்றும் கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது.

விவசாயத்துக்கு லாயக்காயுள்ள தரிசு நிலங்கள் பற்றிக் குறிப்பிடுகையில் இத்தகைய நிலங்களை அளந்து பார்த்து, இவற்றில் விவசாயத்துக்குக் கொண்டுவர லாயக்கானவைஎவ்வளவு விஸ்தீரணமிருக்கின்றன என்பதை நிர்ணயிக்காமல் அப்படியே விட்டு வைப்பதற்கு நியாயமேயில்லை என்று கமிட்டி கூறுகிறது இதற்கு முன்னால் இந்த விஷயம் ஒரு ஒழுங்கு முறை யில்லாமல் மனம்போன போக்கில் கவனிக்கப்பட்டு வந்திருக்கிறதே யொழிய, தெளிவான தொரு அபிவிருத்தித் திட்டமோ, அதை நிறைவேற்றுவதற்கான ஸ்தாபனமோ இருக்கவில்லை.

### திருத்தி யமைக்கப்பட்ட உணவு உற்பத்தித் திட்டம்

விவசாய அபிவிருத்தி மாகாணங்கள் சமஸ்தானங்களின் பொறுப்பாகவே இருக்கவேண்டு மென்பதை கமிட்டி மீண்டும் எடுத்துக்கூறியிருக்கிறது. விரிவான இந்தக் கொள்கைக்கு உட்பட்டு, மத்திய சர்க்கார் செய்யவேண்டிய சில முக்கியமான அலுவல்களும் இருக்கின்றன. மத்திய சர்க்கார், மாகாணங்கள் சமஸ்தானங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக வகுத்துள்ள திட்டங்களை ஒன்றாக இணைத்து இந்தியா முழுவதுக்கும பொதுவான தொரு உணவு உற்பத்தித் திட்டத்தை தயாரிக்க வேண்டும்: உணவு உற்பத்திக்கு வேண்டிய முக்கியமான பொருள்களை சேகரித்து மாகாணங்களுக்கும் சமஸ்தானங்களுக்கும் பிரித்துக்கொடுக்க வேண்டும்; விவசாயத்துக்கு லாயக்கான தரிசு நிலங்களை சீர்படுத்தித் தருவதற்கான பொறுப்பை மத்திய சர்க்காரே ஏற்றுக் கொள்ளவேணடும். இந்தப் பொறுப்பை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டாலொழிய சாகுபடிக்குக் கொண்டுவரக் கூடிய வராளமானபிரதேசம் தரிசாகவே கிடந்துவிடும் என்று கமிட்டி அபிப்பிராயப்படுகிறது.

மாகாணங்களின் ஐந்து வருஷ உணவு உற்பத்தித் திட்டங்களை நிறைவேற்றிவைப்பதற்கு வேண்டிய பண உதவி, அபிவிருத்தி வேலைகளுக்காக மத்திய சர்க்காரால் மாகாணங்களுக்கு மொத்தமாகக் கொடுக்கப்படும் மானியத் தொகைகளிலிருந்து அளிக்கப்பட வேண்டுமென்று கமிட்டி கருதுகிறது. திட்டங்களைத் தெரிந்தெடுக்கும் விஷயத்திலும், நிறைவேற்றி வைக்கும் விஷயத்திலும் மாகாணங்களும் சமஸ்தானங்களும் கூடியமட்டும் அதனதன் இஷ்டப்பிரகாரம் நடந்துகொள்ள அனுமதிக்கப்படவேண்டும் உணவு உற்பத்தித் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதில் ஒவ்வொரு பிரதேசமும் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறதென்பதை மூன்று வருஷங்களுக்குப் பிறகு பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். எந்தப் பிரதேசத்திலாவது போதிய பலன் காணவில்லை யென்று தெரியவந்தால், அடுத்த ஐந்து வருஷ காலத்துக்கு அந்தப் பிரதேசத்துககு அளிக்கப்படவேண்டிய மானியத் தொகையை அதற்கேற்ப நிர்ணயிக்கவேண்டும்.

### மத்திய விவசாய போர்டு

மத்திய சர்க்காருக்கும், மாகாண சமஸ்தான சர்க்கார்களுக்குமிடையே பூரண ஒத்துழைப்பு இருந்துவரும்படி செய்வதற்கு, மத்திய விவசாய அபிவிருத்தித் திட்ட போர்டு ஒன்றும், ஒவ்வொரு மாகாணம் அல்லது சமஸ்தானத்திலும் ஒரு விவசாய போர்டும் அமைக்கப்பட வேண்டுமென்று கமிட்டி யோசனை கூறுகிறது. மத்திய போர்டில் மத்திய, மாகாண, சமஸ்தான சர்க்கார்களின் பிரதிநிதிகளும், விவசாயிகளின் பிரதிநிதிகளும் இருப்பார்கள். வருஷா வருஷம் மகாணங்களும் சமஸ்தானங்களும் வகுக்கும் உணவு உற்பத்தித் திட்டங்களைப் பரிசீலனை செய்து ஒன்றுபடுத்துவது, யந்திரசாதனங்கள், உரம் முதலியவற்றை அந்தந்தப் பிரதேசத்தின் தேவைகளுக்கு தகுந்தாற்போல் வரிசை கிரமமாகப் பிரித்துக் கொடுப்பது, திட்டங்கள் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கின்றன என்பதை ஒவ்வொரு வருஷமும் பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிப்பது, ஆகியவை இந்த போர்டின் அலுவல்களாக இருக்கும். புதிதாக அமைக்கப்பட விருக்கும் மத்திய நில மீட்சி ஸ்தாபனம் மேற்கொள்ளககூடிய நிலமீட்சித் திட்டங்களையும் இந்த போர்டு பரிசீலனை செய்து அங்கீகரிக்கும்.

### மாகாண விவசாய போர்டுகள்

மாகாண போர்டுகளின் அலுவல்களாவன: மீட்கப்படவேண்டிய நிலங்களின் தகுதி விஸ்தீரணம் ஆகியவை பற்றி மத்திய போர்டுக்கு சிபாரிசு செய்வது, மீட்சி வேலையில் மத்திய ஸ்தாபனத்துக்கு உதவி புரிவது, மீட்கப்பட்ட நிலங்களை யார் மூலம் சாகுபடி செய்வது என்பதுபற்றி மாகாண சர்க்கார்களுக்கு சிபாரிசு செய்வது, மாகாண உணவு உற்பத்தித் திட்டங்களின் முன்னேற்றத்தைப் பரிசீலனை செய்து மத்திய போர்டுக்கு அறிவிப்பது.

### நில மீட்சி ஸ்தாபனம்

மத்திய விவசாய அபிவிருத்தித் திட்ட போர்டால் அங்கீகரிக்கப்படும் திட்டங்களை நிறைவேற்றி வைக்க மத்திய நில மீட்சி ஸ்தாபனம் என்ற பெயரில், சுயேட்சையான ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்தவேண்டுமென்று கமிட்டி சிபாரிசு செய்கிறது. இந்த ஸ்தாபனம் 50-கோடி ரூபாய் மூலதனம் கொண்டதாயிருக்கும். இந்தத் தொகை பூராவையும் மத்திய சர்க்காரே அளிக்கவேண்டும். மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட உயர்ந்த பட்சம் 7 டைரெக்டர்கள் கொண்ட போர்டு ஒன்று இந்த ஸ்தாபனத்தை நிர்வகிக்கும். வர்த்தக ஸ்தாபன நிர்வாகம், விவசாயம், நிதி வரவு செலவு நிலத்தீர்வை நிர்வாகம், நீர்ப்பாசானம் ஆகிய துறைகளில் தேர்ச்சி பெற்ற நிபுணர்களும், விவசாயிகளின் பிரதிநிதியொருவரும் போர்டில் ஸ்தானம் வகிப்பார்கள்.

நிலங்களை மீட்டு, மாகாண விவசாய போர்டுகளிடம் ஒப்படைப்பதே. இந்த ஸ்தாபனத்தின் பிரதான வேலை.

பிரயோசனப்படக்கூடிய ரசாயன எருவகைகள் உற்பத்தி செய்யப் புதிய உற்பத்திசாலைகள் அமைப்பதற்குள்ள வசதிகளை பற்றி ஆராய்ந்தறிய நிபுணர்கள் கமிட்டியொன்றை அமைக்க வேண்டுமென்றும் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

(7-ம் பக்க தொடர்ச்சி.)

படுத்துகிறது. பாகிஸ்தானில் பத்திரிகைகள்மீது விதிக்கப்பட்டுள்ள அடக்குமுறை கொள்கை நாஜி ஜெர்மனியில்கூட பிருந்ததில்லையென்றால் அதிகம்சொல்வானேன். பேச்சு சுதந்திரமும் அடியோடு பில்லையாம். பொதுக்கூட்டங்கள் தடைசெய்யப்படுகிறதாம். இதனால் அமைதிக் குறைவு அதிகப்பட்டுவருவதாக கான் சாயபு கூறினார். பட்டாணியர்களுக்கென்று தனிராஜ்யம் வேண்டுமென்ற இயக்கமும் வேகமாக வலுவடைந்து வருகிறது.

CHENNIS SPECIAL DIAMONDS
REGD. (FAMOUS FOR BRILLIANCE) REGD.
CHENNI RADHAKRISHNAN & CO.,
BIG BAZAAR, TRICHINOPOLY.

REGD. INSIST ON REGD.
Original Wheel Mark Diamonds
BIG BAZAAR — TRICHINOPOLY.




# 5. இலக்கியமும் நாட்டியமும்

"அம்புஜம்"

மோன நாடகம் முடிந்த பிறகு எல்லோரும் ஒன்று கூடி அறை நடுவே அமர்ந்தார்கள். ரேடியோ வின் தெள்ளிய கானம் இன்னும் மிதந்துகொண்டுதான் இருந்தது. அந்த லயிப்பில் தாங்கள் நடித்த மோன நாடகத்தின் தொனியை அவர்கள் இலேசாக நழுவவிட்டுக் கொண்டிருந்தார்கள்.

கூடிக் குலவ உட்கார்ந்த பிறகு முதல் முதலாக வத்ஸலாவின் புத்தகம்தான் எல்லோர் கவனத்தையும் ஈர்த்தது.

'ரோஜாவுக்கு ஒரு வேதாந்தம் உண்டா? விநோதமாயிருக்கிறதே?' என்றாள் ஸ்ரீமதி லெப்டினன்ட் ஆகிய துடுக்குக்காரி வனஜா.

"இல்லாமலென்ன? உண்டு. பாரசீக இலக்கிய வாடை பட்டவர்கள் கட்டாயம் அதை மறுக்க மாட்டார்கள். ரோஜா இன்றி வாழ்க்கை இல்லை என்பதே ரோஜா நமக்குத் தெளிவாக்கும் வேதாந்தம்" என்றாள் பாரசீக அழகிபோல் படர்ந்து வந்த பாருன்னிஸா.

"நல்ல அகம்பாவமடி இந்த ரோஜாவுக்கு! அடேயப்பா" என்று ஒரே குரலில் ஒருவரைப் பார்த்து ஒருவர் கேட்டுக்கொண்டனர் கமலாவும், லக்ஷ்மியும்.

தனது புத்தகத்தின் தலைப்பு அந்தப் பெண்களிடையே உண்டாக்கியிருந்த பரபரப்பைக் கண்டு புன்முறுவல் பூத்துக்கொண்டே வத்ஸலா தன் ஜம்பரின் பூரிப்பைத் தடவி விட்டுக் கொண்டாள்.

ஸ்ரீமதி லூஸிபக்லி பளிங்கு போன்ற குரலில் "ரோஜாவுக்கு முள்ளுண்டு (The Rose has thorns) என்பதே ரோஜாவின் வேதாந்தம்" என்று தெளிவுபடுத்தினாள்.

ஸரஸா மௌனமாகவே உட்கார்ந்திருந்தாள். அவளும் அந்த இனிய சம்பாஷணையில் கலந்து கொள்ளத்தான் துடித்தாள். ஆனால் அவளுக்கு ஒரு குறும்புத் தனமான சிறு குறை இருந்தது. தான் புனைந்து வந்திருந்த "ரோஜாவின் குறும்பு" என்ற கவிதையை ஏன் முதலில் அவர்கள் கவனிக்கவில்லை என்று அவள் சிறிது சங்கடப்பட்டாள்.

பத்மஜா இந்தத் தத்துவ விசாரத்தை ரொம்ப ரஸித்துக்கொண்டிருந்தாள்.

"இங்கே கொடு பார்க்கலாம்" என்று கூறிக்கொண்டே வத்ஸலாவின் கையிலிருந்து அப்புத்தகத்தை வாங்கினாள். அட்டையைப் பிரித்ததுதான் தாமதம் — ஆச்சரியத்துடன் 'ஆஹா....ஹா....' என்று கூவினாள் தன்னையும் மறந்து.

"ரோஜா பலதடவை இறக்கிறது. இருந்தாலும் சாஸ்வதமாக வாழ்கிறது." என்ற கருத்து முதல் பக்கத்தில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்தது. அதை எல்லோருக்கும் படித்து காண்பித்தாள். எனையோரும் வியப்படைந்தார்கள்.

'எத்தனையோ மென்மடவார் மடிந்துமறைந்த புனித மண்ணிலிருந்துதான் உலகத்தின் சிறந்த ரோஜாக்கள் மலருகின்றன. அவ்வாறே எத்தனையோ மடிந்துபோன ரோஜாக்களின் வர்ணக் குழைவுதான் அழகிகளின் கன்னத்துச் செக்காராக உருவடைந்திருக்கிறது' என்றாள் ஸரஸா.

எல்லோரும் அவள் பக்கம் திரும்பி மரியாதையுடன் அந்தக் கருத்துரையைக் கேட்டார்கள். தெரிவிக்கப்பட்ட அவ்வளவு கருத்துரைகளிலெல்லாம் அதுவே தலை சிறந்ததாக இருந்தது கண்டு அவர்கள் வியப்புற்றார்கள்.

"ஏன், வத்ஸலா, இந்த புத்தகத்தைப் படித்துவிட்டாயா? என்ன கதை?" என்று கேட்டாள் பத்மஜா.

"சொல்லுகிறேன். ரொம்ப அழகான கதை. ஆனால் அந்தக் கதையின் மூலம் வெளிப்படும் ரோஜாவின் வேதாந்தம் இத்தனை கற்பனைகளுக்கும் அப்பாற்பட்டது.

"ஒரு கிராமத்தில் இரண்டு அண்டை வீடுகள். ஒன்றில் அழகி ஒருத்தி வாசம் செய்தாள். அவள் கன்னி. அவள் வீட்டிற்குப் பின்னால் புழக்கடையில் ஒரு ரோஜாச் செடி இருந்தது. அந்தச் செடி தினம் ஒரு பூ பூக்கும். அந்த அழகுக் கன்னி ஆடுவாள். அடுத்த வீட்டில் குரூபியான ஒரு பெண் வசித்து வந்தாள். அவளும் கன்னிதான். அவள் தினமும் காலையில் எழுந்திருந்து பக்கத்து வீட்டு ரோஜாச் செடியைப் பொறாமையுடன் பார்த்துவந்தாள். ஒருநாள் ஆசை தாங்க முடியாமல் அடுத்த வீட்டு அழகியைத் தனக்கு ஒரு நாள் ஒரு ரோஜா கொடுக்கும்படி வேண்டினாள். அழகியும் ஒப்பினாள். இருவரும் சேர்ந்து ஒரு நாள் மலர் பறிக்கப் போனபோது அந்த மலர் செடியிலிருந்து கீழே விழுந்து மண்பட்டுக் கசங்கிப் போய்விட்டது. இதேபோல் மூன்று நாட்கள் சேர்ந்தாற்போல் நடந்தது. நான்காம் நாள் அழகி மாத்திரம் வந்தாள். ரோஜா மலர்ச்சியுடன் அவளை வரவேற்று அவளது கேசத்துக்கு அழகு செய்ய இசைந்தது. ரோஜா குரூபியின் தலையில் வீற்றிருக்க ஒப்பவில்லை என்பதைத் தெரிந்துகொண்டாள் அழகி.

"அழகிக்கு கல்யாணம் நடந்தது. அவள் தன் கணவன் வீட்டுக்குப் போய்விட்டாள். குரூபிக்குக் கலியாணம் ஆகவில்லை-பாவம் அவள் குரூபி! பழையபடி ரோஜா செடியைக் கவனித்து வந்தாள். ஒரு நாள் செடியருகே சென்று மலரைப் பறிக்கப் போனாள். மலர் விழுந்துவிட்டது. மறுநாளும் அப்படியே.

"ஆனால் மூன்றாம் நாள் விழவில்லை. குரூபி ஆச்சரியப்பட்டாள். இணக்கம் தோன்றி விட்டதோ என்று நினைத்தாள். ஆம்! இணக்கம்தான் தோன்றிவிட்டது. அந்தக் குரூபி என்றும் கன்னியாயிருப்பதானால் ரோஜா அவளுடன் இசைவதாகக் கூறிற்று. அழகியை மறந்துவிட்டால் தான் என்றும் கன்னியாக இருப்பதாகக் குரூபி ரோஜாவின் முன் சபதம் செய்தாள். இதுதான் கதை. இதில் என்ன வேதாந்தம் தொனிக்கிறது!" என்று கேள்வியுடன் கதையை முடித்தாள் வத்ஸலா.

"இதில் என்ன வேதாந்தம் இருக்கிறது? வெறும் ரோஜாவின் குறும்புதான்" என்றாள் ஸரஸா.

அவளது கவிதையைக் கேட்க எல்லோரும் ஆவலாயிருந்தனர்.

"ரோஜாவே, நீ என்னை வாட்டுகிறாய். நீயும் வாடுகிறாய். நான் பொலிவுடன் இருக்கும்போது உனக்கு அழகில்லை. நீ மலர்ந்திருக்கும்போது என் வதனம் வாடியிருக்கிறது!" இதுவே அந்தக் கவிதையின் சாரம்.

ராஜம் தன் ரோஜாப் பாடலை முணமுணக்க ஆரம்பித்தாள். "நன்றாகப் பாடேன். நான் நடனமாடுகிறேன்" என்று கொண்டே எழுந்தாள் ஊர்வசி நீலா. பாட்டும் கூத்தும் ஆரம்பித்தன.

(தொடரும்)

★


சூதகத்தை நிறுத்தியது.

நமது (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்த வல்லது. நிலைமை விளைவிக்காமல் கஷ்ட நிவர்த்தியளிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். விலை ரூ. 3 நாட்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ. 5 மிக்க கடுமையான கோளாறுகளுக்கு ரூ. 8 கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets) 6 மாத உபயோகத்திற்கு விலை ரூ. 4



(வி. பி.க்கு 12 அணா அதிகப்படி.)

Mrs. P. DEVEE, F.D.S. (S)
Tollygunge, CALCUTTA.
Stockist:—HARRY & SON,
93, China Bazaar Rd., MADRAS.






மைசூர் சர்க்கார் தயாரிப்பு.

# சேக்கிழார் திருநாள்

## தேவகோட்டை விழாக்கள்

சர்வதாரி வருஷம் வைகாசி மாதம் 26-ந் தேதி (8—6—48) செவ்வாய்க் கிழமை தொடங்கி, 10—6—48 வியாழக்கிழமை வரை மூன்று நாட்களிலும் தேவகோட்டை நகரச் சிவாலயத்திற்கு முன்பேயுள்ள "முருகவேள்" சதுக்கத்தில், நிறுவப்பெற்றுள்ள விழாப் பந்தலில் தெய்வச் சேக்கிழார் திருநாள் விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது. ஆஸ்திக மக்கள் பலரும் குழுமியிருந்தார்கள். ஏற்கனவே அறிவித்திருந்தபடி, முது பெரும் புலவர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமை வகிக்க வர இயலாமையால் 'சிவநேசன்' ஆசிரியர் உயர்திரு. இராமசாமிச் செட்டியார் அவர்கள் தலைமை வகித்து, விழாவைச் சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள். சேக்கிழார் திருநாட் கழகத்தின் தலைவர் திரு. உ. ராம, மெ. சுப. சேவு. மெ. மெய்யப்பச் செட்டியார் அவர்களும் கழகத்தின் அமைச்சர்களும் சேக்கிழார் விழா நல்ல முறையில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். வந்திருந்தோர்களும் விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவுகளை ரஸித்தார்கள். சொற்பொழிவுகளும் உயர் தரமாக இருந்தன. புலவர் பெரு மக்களும் இவ்வாண்டு விழாவில் சிறப்பாகப் பங்கெடுத்துக் கொண்டதைக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

முதல் நாள், கடவுள் வாழ்த்தானதும் கழகத் தலைவரின் வரவேற்புரை நிகழ்ந்தது. பின்பு ஆண்டு அறிக்கை படிக்கப் பெற்றதும், விழாத் தலைவர் முன்னுரை பகர்ந்தனர். "சேக்கிழாரும், கல்வெட்டுகளும்" என்பது குறித்து திரு. மா. இராசமாணிக்கம் அவர்களும், நமது தவம் என்பதுபற்றி தூத்துக்குடி சிவராம சீதாபாய் அம்மையாரும் "சேக்கிழாரும், பிற புலவரும்" என்னும் பொருள் குறித்து திரு. அ. ச. ஞானசம்மந்தம் (எம். ஏ.) அவர்களும் விரிவுரை யாற்றினர்கள். விழாத் தலைவர் இறுதியில் கருத்துரை பகர்ந்ததும் முதல் நாள் விழா நிறைவேறியது.

இரண்டாவது நாள் விழா காலையில் 8-30 மணிக்கு ஆரம்பமாகியது. 'சேக்கிழார் காப்பியச்சிறப்பு" பற்றி வித்வான் ஆழ்வாரய்யங்கார் அவர்களும் "சேக்கிழார் செய்யுள் நயம்" குறித்து தேவகோட்டை வித்வான் சுப. திருநாவுக்கரசு செட்டியார் அவர்களும் விரிவுரை நிகழ்த்தினர்கள். சொ. பெ. பா. மாணவி ராமாமிர்தம் சேக்கிழார் பற்றியும் வித்வான் கி ந. பாலசுப்பிரமணிய அய்யர் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் பற்றியும் சொற்பொழிவு ஆற்றியது நன்றாயிருந்தது. பின்னர், 'சேக்கிழாரும், சேயடியாரும்' என்னும் பொருளை 'சிவகிழார்' வா. திருநாவுக்கரசனர் பேசியதும் காலை நடவடிக்கைகள் பூர்த்தியாயின. அன்று பிற்பகலில் ஆற்றப் பெற்ற சொற்பொழிவுகள் 'சேக்கிழாரும் திருமுறைகளும்' 'சேக்கிழாரும் சேயிழையாரும்' 'சேக்கிழாரும் திருவள்ளுவரும்' என்னும் பொருள்கள் குறித்து பள்ளத்தூர் முத்து வெங்கடாசலம் அய்யர், ஸ்ரீமதி கி. ருக்மணி அம்மாள், அய்யர், சரவண முதலியார் ஆகிய புலவர்களால் முறையே நிகழ்த்தப் பெற்றன. விழாத் தலைவரின் கருத்துரையோடு இரண்டாவது நாள் நடவடிக்கைகள் நிறைவேறின.

மூன்றாவது நாளான வியாழக்கிழமை காலை முற்பகலில் சிவாலயத்தில் சேக்கிழார் வழிபாடு நிரம்பத் திருப்திகரமாக இருந்தது. பிர்ம்மானந்த காட்சியாகவும் விளங்கியது. நகர மக்களும் மற்றவர்களும் இவ்வழிபாட்டில் கலந்து கொண்டார்கள்.

பிற்பகலில் சிறந்த சொற்பொழிவுகள் ஆரம்பமாயின. சிறந்த இந்து சமய பிரசாரகரும் 'தொண்டன்' பத்திரிகை ஆசிரியருமான நாகர்கோவில் திரு. ஆறுமுக நாவலர் அவர்கள் நன்னெறி காத்த நாதனர் என்பது குறித்துச் சொற்பொழிவாற்றினர்கள். அடுத்தபடியாக சேக்கிழார் திருவுள்ளம் பற்றித் திரு. சுப. ஆறுமுகம் செட்டியாரும் 'சேக்கிழாரும் திருத்தொண்டரும்' என்னும் பொருள் பற்றி வித்வான் அ. கணபதி ஐயாவும் 'தமிநந்தியடிகள்' பற்றி தேவகோட்டை நா. பார்வதியாச்சியாரும், 'சேக்கிழாரின் நாடகச் சித்திரம்' குறித்து, திருவாசகம் பாலசுப்பிரமணியனும் (அட்வகேட்) முறையே விரிவுரை யாற்றிச் சபையோரை மகிழ்வித்தார்கள். அமைச்சரின் நன்றிகூறலும் மங்கள வாழ்த்தும் செவ்வனே நடைபெற்றன. விழாவும் இனிதே நிறைவேறியது. ஆஸ்திகர்கள் அனைவரும் சேக்கிழார் திருநாட் கழக நிருவாகிகளைப் பாராட்டினர்கள்.

இரவில் யானை மீது திருமுறை ஊர்வலக் காட்சி மக்களை கவரும் காட்சியாகத் திகழ்ந்தது.

★

## சர்வதேச கிரிக்கட் கோஷ்டி

கிராய்டனிலுள்ள சர்வதேச மொழி சங்கத்தின் ஒரு அங்கமாக அமைக்கப்பட்டுள்ள — பிரிட்டனிலேயே ஒரே ஒரு கோஷ்டியான—சர்வதேச கிரிகெட் கோஷ்டியில் இந்தியர்களே அதிகப் பிரதிநிதித்வம் பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு இக்கோஷ்டி நிறுவப்பட்டபொழுது ஆறு இந்திய ஆட்டக்காரர்கள் இக் கோஷ்டியின் முதுகெலும்பாக விளங்கிவந்தனர். இவ்வருடம் ஐந்து இந்திய ஆட்டக்காரர்களே இருந்த போதிலும் எண்ணிக்கையில் இவர்கள் மேற்கிந்தியத் தீவுகளுக்கு அடுத்தபடியாக இரண்டாவது ஸ்தானம் வகிக்கின்றனர்.

பிரதானமாக கல்லூரி மாணவர்களைக் கொண்ட இக் கோஷ்டியின் முக்கிய நோக்கம் பிரிட்டனிலுள்ள இதர கல்லூரி, கவுண்டி கட்சிகளுடன் போட்டி ஆட்டங்கள் விளையாடுவதே. இதர கிரிக்கெட் கோஷ்டிகளுடன் போட்டியிடக்கூடிய திறமையை எய்துவதற்கு இன்னும் சிலவருடங்கள் பிடிக்குமென்பது உணரப்பட்டுள்ள போதிலும் இக் கோஷ்டியின் அங்கத்தினர்கள் தங்களுடைய தரத்தை கூடிய மட்டில் விரைவில் உயர்த்திக் கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்துடன் அதி தீவிரமாக முயற்சி செய்து வருகின்றனர். அவர்களிடம் திறமைக்குக் குறைவில்லையாதலால் அம்முயற்சியில் அவர்கள் வெற்றி ஈட்டுவார்களென்பதில் ஐயமில்லை.

இக் கிரிக்கெட் கோஷ்டியில் 'பாட்டிங்' (Batting) செய்வதில் புகழ்பெற்றுள்ள இந்தியர்களில் பம்பாயைச் சேர்ந்த மாரிஸ்டி சௌஸா என்பவரும் ஒருவர். இவருடைய வைராக்கியமான தற்காப்புடன் கூடிய ஆட்டத்திற்கு முன் பல போட்டிகளில் அநேக பிரபல 'பௌலர்'கள் (Bowler) மண்ணைக் கவ்வியுள்ளனர்! சர்வதேச மொழிக்கழகத்தின் கவியென அன்பாக அழைக்கப்படும் சென்னையைச் சேர்ந்த வி. ஜி. கே. மூர்த்தி என்பவர் 'பாட்' செய்வதிலும் 'ஸ்பின்பௌலிங்' செய்வதிலும் மகா சமர்த்தர். ஆட்டப் போட்டிகளில் இக் கோஷ்டியின் வெற்றி அநேகமாக இவ்விரு ஆட்டக்காரர்களையும் பொருத்தே யிருக்கின்றது.

மைசூரைச்சேர்ந்த ராஜாராவ் அநேக போட்டிகளில் திறமையாக விளையாடியிருப்பதுடன் கட்சி கஷ்டமான நிலைமையிலிருக்கும் பொழுது கட்டாயம் கைதூக்கி விடக்கூடிய ஒரு நபராகவும் விளங்கினர்.

★

## என் குற்றம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுவசியமாக இடையில் அகப்பட்டு கொண்டு அவஸ்தைப்படுவது 'இ' ஆகிய நான்! அதற்காக நான் வருந்துகிறேன். எதற்காகத்தான் பிறந்தேனே என்று வருந்துகிறேன்.

அவளும் சரி, அவரும் சரி; இப்போதெல்லாம் முன்போல் கலகலப்பாகப் பேசுவதில்லை. கருத்து, சிரிப்பு ஒன்றுமே இல்லாமல் 'சப்'பென்று இருக்கிறது உரையாடல். எனக்கும் அப்படித்தான்!

அவள் அவரைப் பற்றி என்னுடன் பேசுவதில்லை; அது கஷ்டமாக இருக்கிறது. அவர் அவளைப் பற்றியே இன்னும் விசாரிக்கிறார்; அதுவும்தான் கஷ்டமாக இருக்கிறது. என்ன செய்ய?

"நடந்தது நடந்துவிட்டது; கவலைப் படாதீர்கள்!" என்கிறேன். 'எவ்வளவு அலட்சியம்!' என்று எண்ணிக்கொள்ளுகிறார்.

"அவள் கெட்டவள்; அதைவிட நல்லவளாகக் கிடைக்கத்தான் போகிறாள் உங்களுக்கு!" என்பேன். 'இன்னுமா உனக்கு அவள் மீது பொறாமை?' என்று நினைக்கிறார்.

'அவளை நினைக்கவே வேண்டாம்!" என்று ஒதுக்கிப் பார்க்கிறேன். 'எனக்கு யார்தான் கதி?' என்று கோபமடைகிறார்.

நான் என்னதான் செய்யட்டும்? எப்படித்தான் ஆறுதலளிக்கட்டும்? என் நட்பு போய்விட்டால் எனக்கே வெறிச் சென்றிருக்கிறது. வருந்திக்கொண்டேயிருந்தால் சரியாகப் போய்விடுமா? என்னமோ, ஏதோ, வருந்துகிறேன்! வ-ரு-ந்-து-கி-றே-ன்!


தந்தி வலாசம் :—'கோகுல்'
போன் நெ. 57

Estd. 1909
Branch : MANNARGUDI

கும்பகோணம்
டி. எஸ். ஆர்.
கம்பெனியின்
சந்தனுதித் தைலம், கோகுல் பாக்குப்பொட்டலம், அரைக்கீரைவிதைத் தைலம், கோகுல் வத்தி தினுசுகள் இவைகளை உபயோகியுங்கள்.




கோகுல்
கூந்தல் தைலம்
தைலங்கள் கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றன.
எங்கள் ஆலிலை கிருஷ்ணன் டிரேட்மார்க்கை கவனித்து வாங்குங்கள்.

சென்னை நகரத்திற்கு சோல் ஏஜண்டுகள் :—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை.
கோவை ஏஜண்டு :—
B. பாலபட்டாபி செட்டியார்,
246, வைசியாள்தெரு, கோயம்புத்தூர்.



TRADE MARK CVR
குவாலிடி காப்பி
திருச்சி.

பாரதி விடுதலை

# ஆர்வம் வேண்டும்

[ஆர். ராமநாதன்]

'பாரதி விடுதலைக் கழகம்' தோன்றி மூன்று மாதங்கள் ஆகின்றன. ஆனல் உருப்படியான பயன் ஒன்றும் கிட்டவில்லையே எனச் சிலர் கேட்கிருர்கள்.

உண்மையாகவே பாரதியாரின் இலக்கியங்களைப் பற்றி தமிழ்நாட்டில் உள்ள அனைவரும் நன்மதிப்பு கொண்டு அதைப் போற்றிப் புகழ்ந்து அதனுல் பயனடைந்து வந்திருக்கிருர்கள் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. இதனுல் ஷி கழகத்துக்கு எவ்வளவு வேண்டுமானுலும் பொதுஜனங்களிடமிருந்து ஆதரவு கிடைக்கும் என்ற திட நம்பிக்கை கொள்ளலாம்..

ஆனல் என் இன்னும் பாரதி இலக்கியம் விடுதலையாகவில்லை என்று கேட்டால், உடமையாளர்கள், அவர்கள் நல்லவர்களோ, கெட்டவர்களோ, இந்த விஷயத்தில் கொஞ்சம் யோசனை செய்வதாகவே தெரிகிறது. 'கொஞ்சம் கௌரவத்தை விட்டுக்கொடுக்க வேண்டுமே' என்ற மனப்பான்மையும் இருக்கலாம். ஆனல் 'அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்'. அதாவது வேண்டுகோளுக்குமேல் வேண்டுகோள் பொதுஜனங்களிடமிருந்து சம்பந்தப்பட்டவர்களுக்குப் போய்க் கொண்டே இருக்கவேண்டும். தினசரிப் பத்திரிக்கைகள் உடனே இந்த விஷயத்தைவைத்து கண்டிப்பாய் தலையங்கங்கள் எழுதவேண்டும். ஒவ்வொரு நாளும் இதை வற்புறுத்தும் வாசகங்கள் தினசரியில் வருவது நல்லது. இதற்கு பத்திரிகைகள் முன்வந்து வேலை செய்தால் பலன் கண்டிப்பாய் ஏற்படும் கூடிய சீக்கிரத்தில்.

ஆனல் இவைகள் எல்லாவற்றையும் விட வெகு எளிதில் காரிய சாத்தியமாகும் ஒரே வழி சென்னை அரசாங்கம் ஒரு பிரகடனம் வெளியிட்டு ஷி இலக்கியங்களை பொதுவுடைமயாக்கி விட்டதாக அறிவிப்பதாகும். ஆனல் தற்போது இந்தக் காரியம் சாதிக்கவும் பொதுஜனங்கள் அரசாங்கத்திற்கு மனு மேல் மனுப்போட வேண்டி இருக்கிறது.

இந்த நிலையிலே ஒரு பத்திரிகை இந்த அரிய முயற்சிகளை யெல்லாம் நையாண்டி செய்து எழுதுகிறது. எல்லாக் கஷ்டங்களோடு இந்தப் பத்திரிகைக்கு வேறு 'மறுப்பு' எழுதியாக வேண்டும்!

ஆனல் இந்த முயற்சியில் வெற்றி நிச்சயம். எப்படியாவது பாரதிக்கு 'விடுதலை' கிடைத்து விடும் என்ற திடநம்பிக்கை நமக்கு உண்டு. எவ்வளவோ அளவு மக்களுக்கு உண்மையான வழிகாட்டியாக இருக்கவேண்டிய பாரதி இலக்கியம் இந்த நிலையிலே இருந்துவிடாது. இந்தப் போராட்டம் எளிதில் முடிக்கப்பட்டால் அதற்குக் காரணம் பிரஸ்தாப உரிமைகள் கழன்று போவதால் இருக்குமே யல்லாமல் கழகத்தின் யோக்கியதாம்சக் குறைவால் இருக்காது என்று சந்தேகப்படும் அன்பர்கள் அறிந்துகொள்ளுவார்களாக.

'பெரிய மனிதர்கள்' என்று எண்ணிக்கொண்டு இருப்பவர்கள் இது விஷயத்தில் இன்னும்சிரத்தை காட்டவில்லை. இந்த அரிய சேவை செய்து பாரதியின் ஆத்மாவுக்கு பரிபூரண திருப்திஅளிக்கும் பாக்கியம் அவர்களுக்கு வேண்டாம்போல் இருக்கிறது!

உடமையாளர்கள் தயங்க, அரசாங்கம் தயங்க, பெரிய மனிதர்கள் தயங்க இந்த விஷயத்தில் என்ன இருக்கிறது? ஆனல் ஷி தயங்கும் மனிதர்கள் இன்னும் தயங்கிக் கொண்டே இருப்பார்களானுல் பாரதியின் 'சாபம்' அவர்களை விடுமா என்று பாரதி அன்பர்களுக்கு சந்தேகமாய்த் தான் இருக்கிறது!

பாரதி அன்பர்கள் தங்கள் சக்திக்கு எட்டியவாறு இன்னும் இந்தத் தொண்டில் பரிபூரணமாக ஈடுபட்டு பாரதி இலக்கியங்களின் பயனை தமிழ் மக்கள் பரிபூரணமாக அனுபவிக்க வழி செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு எல்லோருடைய ஆர்வமும் பயன்படுமாக.



★

மனித ஹிருதயத்திலிருந்து அனுப்பப்படும் இரத்தம் 24 மணி நேரத்தில் 168,000,000 மைல்கள் பிரயாணம் செய்கிறது.

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

"இண்டர் மீடியட்", "பி. ஏ." வகுப்புகளுக்குப் போலவே எஸ். எஸ். எல். சி.க்கும் செப்டம்பரில் ஒரு இரண்டாம் பரீட்சை வைக்கலாமா என்ற பிரச்னை இப்போது ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இந்த யோசனை நல்ல சந்தர்ப்பத்தில்தான் வெளி வந்திருக்கிறது. இப்படி ஒரு உப-பரீட்சை வைப்பது உசித மென்றே நாம் நினைக்கிருேம்.

இப்படி ஒரு உப பரீட்சை வைப்பதன் மூலம் பரீட்சை நிர்வாகத் துறையில் வேலை பளு சற்றுக் குறைந்தாலும் குறையலாம். ஒரு வருடகாலம்காத்திருக்கவேண்டிய நிர்ப்பந்தம் இருக்காது. இந்தப் புதிய யோசனையை ஏற்றுக்கொள்வது நலம என்றே நாம் எண்ணுகிருேம்.

★


பாத்ருடுவின்

பாலசஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு
சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும் சிறந்த மருந்து.
58 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக் கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றி வருவதனுல் டாக்டர்கள் இச் சஞ்சீவினியையே உபயோகித்துக் கொண்டிருக்கிறர்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.
போலி மருந்துகளைக் கண்டு ஏமாருதீர்கள்.

டாக்டர் பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதருஸ்—4.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில், கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.




அமிர்தாஞ்சன்

சகல வலி நோவுகளுக்கும்

கைகண்ட மருந்து

எங்கும் கிடைக்கும்

அமிர்தாஞ்சன் லிமிடெட்.,

சென்னை, பம்பாய், கல்கத்தா, பெங்களூர்.

முக்கிய அறிவிப்பு

எங்கள் கம்பெனியில் விசேஷ காலங்களில் குறித்த நேரத்தில் டெம்பாரி லைட்டுகளும், மீட்டிங், கச்சேரிகளுக்கு மைக்கும், ரிக்கார்டு செட்டும், மின்சாரம் இல்லாத இடத்தில் பேட்ரி செட்டும், அமைத்துக் கொடுக்கப்படும் இத்துடன் பர்மனன்ட் வயரிங் உத்திரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும்

விபரங்களுக்கு :-

புரோப்ரைட்டர் C. G. சாமி

எலக்டிரிக்கல் காண்ட்ருக்டர், சன்னதி வீதி, திருவானைக்காவல்.




பட விமரிசனம் — டி. ஆர். ஜி.

# பக்த ராமதாஸ்

ஒரு சங்கீத பக்தரின் கதையைப் படம் பிடிப்பது (14000 அடிக்குள்) என்பது சற்று சிரமமானதுதான். அதிலும் ஒரு பாகவதர் நடிக்கிறார் என்றால் மிகமிக கஷ்டந்தான் அப்படிப்பட்ட கஷ்டத்தினால்தான். ஷ ராமதாஸர் கதை விட்டு விட்டு தொடர்கிறது. ஆனாலும் ஓரளவு டெம்போ இருக்கிறது.

Y. V. ராவ் முன்பே ஒரு முறை நவாப் ராஜமாணிக்கத்தால் பிலிமாக்கப்பட்ட ஷ கதையை எதற்காக படமெடுத்தாரோ தெரியவில்லை. களக்காடு ராமநாராயணன் ஒரு நடிகராவதற்குத்தானோ?

கதை வசனம் :-

கதை ஆரம்பிப்பது ஒரு புது கற்பனையாக இருக்கிறது. மகாத்மா காந்தியைப்பற்றிய ஒரு குட்டி உபன்யாஸத்தைத் தொடர்ந்து 150 வருடத்திற்கு முன்னர் மகாத்மாவைப்போல வாழ்ந்த ராமதாஸர்' என்று குறிப்பிடுகிறார். மகாத்மா, ராமதாஸரைப்போன்றவரா? அல்லது ராமதாஸர் மகாத்மாவைப் போன்றவரா? இது ஒரு புதிர். தவிரவும் தற்கால ஹைதராபாத் விஷயங்களை மனதில் கொண்டு அவைகளை கபீர்தாஸரின் வாயால் வெளிப்படுத்துவது, கதை வசனத்தின் உயர்வானதகுதிதான். ஆனால் ஜெயிலில் கிடக்கும் கோபன்னா எடுத்த எடுப்பிலேயே ராமனை நிந்தாஸ்துதி செய்வது அவ்வளவு நன்றாக இல்லை. ஒரு வாரத்தில் முதலிலெல்லாம் புகழ்ந்துவிட்டு கடைசி நிமிஷத்தில் பொறுமையை இழந்து நிந்தித்ததாகத்தான் கதை.

அப்படியிருக்கையில் ஜெயிலில் போட்டதுவுமே நிந்திப்பது அவ்வளவு இயற்கையாக இல்லை.

நடிப்பு :-கோபன்னாவாக நடிக்கும் களக்காடு ராமநாராயணன் ஒரு சங்கீத வித்வான். மேடை அவருக்குப்புதிது. இருந்தாலும், முன்பு நடித்த வித்வான்களை மிஞ்சிவிட்டார் என்றாலும் நடிப்பு அவ்வளவாகப் போதாது. நன்றாகப் பாடுகிறார்.

தாநிஷாவான Y. V. ராவின் நடிப்பு பரவாயில்லை என்றுதான் சொல்லலாம். உயர்ந்ததாக இல்லை. தாநிஷாவின் நடிப்பைவிட Y. V. ராவுக்கு பிச்சைக்கார நடிப்பு நன்றாக இருக்கிறது.

ஸ்ரீமதி-ருக்மணி, பேகம்ஷாவாக வந்து கூடியவரையில் நடிக்கிறார். ஆனால் கடைசியில் 'ஸியாமளன் வந்தாரடி' என்று பாடி நடனமாடுவது இயற்கையாக இல்லை. (அவர் ஒரு நாட்டிய ராணி ஆகையால், அவரது திறனை இப்படிப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.)

கோபன்னாவின் நண்பரான சாஸ்திரியாக நடிப்பவரும் கபீராக நடிக்கும் சத்ய நாராயணாவும் தமிழ் உச்சரிப்பை கொலை செய்கிறார்கள். நடிப்பு அபாரம்.

சாஸ்திரியின் மனைவியாக வரும் K. V. ஜயகௌரி வெளுத்து வாங்குகிறார். உண்மையில் சாஸ்திரியும், இவரும்தான் நடித்திருக்கிறார்கள்.

பேபி-சேதுராமனும், அவன் தம்பியும், ராம லட்சுமணராகவந்து போகிறார்கள். இவர்கள் வேடப் பொருத்தம் நன்றாக இருக்கிறது.

பாடல்கள் :-பாபநாசம் சிவனால் இயற்றப்பட்ட பாடல்கள் பெரும்பாலும் ராமதாஸரின் தெலுங்கு ஸாகித்யங்களின் மொழிபெயர்ப்பாக இருக்கிறது. இதனால் கதை ரஸனை குறையாமல் இருக்கிறது. ஆனாலும் 'என்ன கானு ராம பஜன' என்ற பாட்டு தெலுங்கிலேயே இருப்பது, அதை ராமதாஸ் நிரவல் செய்வதும் அவசியம்தானா? தெரியவில்லை.

தமிழ் நாட்டு ஸ்டுடியோவில் இடமின்றி கல்கத்தாவை நாடி ஓடியும் (நியூ தியேட்டருக்கு) ஒலி, ஒளிப்பதிவு, பூஜ்யமாகவும், ஸெட்டிங்குகள் அறவே மோசமாகவும் இருக்கிறது. ஒலி சில இடங்களில் அலறுகிறது. ஒளி மின்னிப் பளிச்சிடுகிறது. சில இடங்களில் மயங்குகிறது.

Y. V. ராவின் டைரக்ஷனுக்கு இப்படத்தில் அவசியமேயில்லை. குறைகள் நிறைய உண்டு.

ஒரு பாகவதரையும், ஒரு நாட்டிய ராணியையும் உடைய இந்த ராமதாஸர்படம் ஒரு பாக்ஸ் ஆபீஸ் வெற்றிஎனக் கூறமுடியாது என்பதை நிரூபிக்கிறது.

# சங்கப்பலகை

ராமநாதன், பூவாளூர்.

ஹைதராபாத் நிஜாமுடன் இந்திய சர்க்கார் நடத்திவரும் பேச்சு வார்த்தைகள் திடீரென முறிவதும் திடீரெனத் திரும்ப ஆரம்பிப்பதும் ஏது முடிவும் ஏற்படாமலிருப்பதும் என்ன காரணத்தினால்?

நிஜாம் ஏதோ திட்டமிட்டுக் கொண்டு காலத்தை ஒத்திப்போட்டுக்கொண்டு வருவதில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்திய அரசாங்கம் காஷ்மீரத்தில் தன் ராணுவ கவனம் செலுத்திக் கொண்டிருக்கும்போது ஹைதராபாத்தையும் "கவனிக்க" முடியாது என்று நினைக்கலாம்.

சுந்தரேசன், தஞ்சை.

அகில இந்திய "மக்கள் நாடகக் கழகத்தின்" கிளை எல்லா மொழியினரிடையேயும் உருவாகி வேலை செய்து வருகிறதே. தமிழில் ஏன் இன்னும் உருவாகவில்லை?

இது ஒரு முக்கிய விஷயம்தான். தமிழிலும் இத்தகைய நாடகக் குழு ஒன்று தோன்றினால் நன்றாகத்தான் இருக்கும்.

கோகுலன், சென்னை.

காமராஜ் நாடாரவர்கள் திரும்பவும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறாரே! அவரது பதவி இன்னும் எத்தனை காலத்துக்கு நீடிக்கும்?

1950-ம் ஆண்டுவரை நீடிக்கும்.

ரஞ்சனி, உடுப்பி.

தமிழில் சிறு கதைகள் பல எழுதியிருக்கும் எம். எஸ். கமலா அவர்களும், ரேடியோவில் பாடும் எம். எஸ். கமலாவும் ஒரே பெண்மணிதானா?

இல்லை. வெவ்வேறு பேர்.

அச்சுதன், மதுரை.

லண்டனில் இந்திய ஹைகமிஷனராக இருக்கும் கிருஷ்ண மேனன் அவர்களுக்கு முன்பெல்லாம் லண்டன் இந்தியர்களிடையே போதுமான செல்வாக்கு இல்லை என்கிறார்களே, உண்மைதானா?

உண்மைதான். அவர் தலைமை வகித்து நடத்தி வந்த இந்திய கழகத்துக்கும், ஏனைய இந்திய கழகங்களுக்கும் இடையே முன்பெல்லாம் போதுமான ஒத்துழைப்பு இருந்ததில்லை.

கேசவன், புதுக்கோட்டை.

கலையில் பிரசாரம் கலப்பது நல்லதா கெட்டதா?

நல்லது என்று கூறுபவர்களும் இருக்கிறார்கள். கெட்டது என்று சொல்லுபவர்களுமுண்டு. கவர[illegible] யான அம்சங்களுடன் இயற்[illegible] யாக இழைந்துபோகும் நல்ல [illegible] சாரம் வரவேற்கத் தக்கது.

சிவராமன், கோபி.

ராஜாஜி கவர்னர் ஜெனரல் ப[illegible] ஏற்றவுடன் முதல் காரியம[illegible] என்ன செய்வார்?

தன் காரியாலய தஸ்தாவே[illegible] களை ஒழுங்குபடுத்திக்கொள்வா[illegible]

மௌண்ட் பேட்டனுக்கு செ[illegible] வாக்குத் தேடித் தந்த பல க[illegible] ணங்களிலும் அவரது அழ[illegible] ஒன்றுதானா?

ஆமாம். முக்கியமான ஒன்[illegible] கவர்னர் ஜெனரல் பதவிவ[illegible] விடுத்தவுடன் அவர் என்ன செ[illegible] வார்?

லண்டனுக்குப் பற[illegible] செல்வார்.

ரங்கநாதன், கோவிலூர்.

எனது நண்பரொருவர் தெலு[illegible] கில் சில கேள்விகள் கேட்க வி[illegible] புகிறார். சங்கப் பலகையில் இட[illegible] கிடைக்குமா?

நீங்கள் அவற்றைத் தமிழி[illegible] மொழி பெயர்த்து அனுப்பின[illegible] கிடைக்கலாம்.

பாண்டு, ஆத்தூர்.

ஜலக் கஷ்டமுள்ள ஊர்களுக்[illegible] ஆறுகள் வேண்டுமானால் என்[illegible] செய்வது?

ஏழுகள் வேண்டுமானால் ஏன் [illegible] செய்யலாமோ அதையே செய்[illegible] லாம்.

தன்வந்திரி, கோவை.

அபேதானந்தமாய், நித்யான[illegible] மாய், குணானந்தமாய் விளங்கு[illegible] பகவானுக்குப் பூஜை விஷயமா[illegible] ஏதாவது கேள்விகள் கேட்[illegible] லாமா?

பயமாயிருக்கிறது, சாமி...ப[illegible] பயமாயிருக்கு. 'சங்கப் பல[illegible] யில்' பகவத விஷயமாய் என்[illegible] செய்கிறீர்கள்?

ஒன்றும் செய்வதில்லை. ம[illegible] னிக்கவும்.

சிவாஜி
சங்கப்பலகை
கூப்பன்
20—6—48

கல்யாண காலத்திற்கு வேண்டிய பட்டு & நூல் ஜவுளிகள், ஸ்டாக் செய்துள்ளோம். எல்லாம் புத்தம்புதிய தினுசுகள்!

**M. N. நாகேந்திரம் சன்ஸ்**

Propr: M. N. குப்புசுவாமி. மலைவாசல் உள் மண்டபம், தெப்பக்குளம் P. O. திருச்சி.




"ராதிகா"

# காட்டில் குழப்பம்

ிங்கம் ஒழிக! நரி வாழ்க" என்ற ஆரவாரம், ஒரு வானத்தைப் பிளந்து ண்டு கிளம்பியது. எதிர்ப்பு லங்கள் பல்வேறு திசைகளி கிளம்பின. சில கூட்டங்கள் ட்டுத் தீர்மானங்களை நிறை ற்றின. மிருகங்கள் நாலு ஐங் க் கூடி 'குசு, குசு' என்று ஆரம்பித்தன. காட்டிலே கலாட்டாவாகப் போய்விட்

ிய ராஜா ஸிம்மாஸனத்துக்கு போகிருர் என்று எங்கும் பேச்சு. காடி முதலியன து தான் இந்தத் தடவை ஸ்' அடிக்கும் என்று தீவிர கூறின. யானைக்கு எதிர்ப்பே க்காது என்று ஜோஸ்யம் ன அக்கட்சியைச் சேர்ந்தவை

தற்கெல்லாம் காரணம்-சிங்க ஊரிலில்லை. தன் மாமனர் டிற்குச் சென்றது. ஒருமாத யும் திரும்பவில்லை—அதற்கும் பு சரியாக இல்லாமலிருந் கே என்ற அதன் மாமியார் குரங்காரைக் கூப்பிட்டுக் டது. நாட்டு வைத்தியத்தில் நக்கு இணை அவர்தான்! கருங் கு ஒருலேகியம் தயார்செய்து த்தைந்து நாள் சாப்பிட்டால் பு பழய மாதிரி ஆகிவிடும் உறுதி கூறிந்து.

ந்த இடைக்காலத்தில்தான் வேடர்கள் தைரியமாகக் காட் ள் புகுந்து, மான், புரு, முயல், ி முதலியவைகளை வேட்டை க் கொன்று தள்ளினர். ர்களின் இக்கொடிய செயல் ங்களிடையே பெரிய குழப் தயும் மனத்தாங்கலையும் உண் கிவிட்டது.

யாக நாற்பத்தி ஆரும் நாள் ராஜா மாமனர் வீட்டிலிருந்து பிற்று. வேடர்கள் புரிந்த ஹாஸத்தை கண்களில் நீர் ச் சொல்லி முறையிட்டன ங்கள். சிங்கமும் அவை குறைகளை கவனிப்பதாக ளித்தது. ஆனல் அதனல் னயே எதுவும் செய்யமுடிய . முடியுமா?

க்கு வெகுநாட்களாக தான் வாக வேண்டும் என்ற ஆசை! கு தக்க சமயத்தையும் எதிர் துக் கொண்டிருந்தது. காட் லாட்டா ஆரம்பித்ததும் இது சமயமென்று ஒரு கட்சியை - ஆரம்பித்துவிட்டது. ஓனய், முதலியன நரி கட்சி சேர்ந்துவிட்டன. நரியும் ராஜாவாக ஆனதும் தன் ாருக்கும் அவைகளைச் தவர்களுக்கும் பூர்ண சலு ளும் காண்பிப்பதாகவும் சர்க் காரில் ஊதியம் தரக்கூடிய பெரிய உத்யோகங்களைக் கொடுப்பதாக வும் உறுதி கூறிற்று.

யானைக் கட்சிக்கு அவ்வளவு ஆதரவு இல்லாது போனலும் சில பறவைகளும் ஒன்று இரண்டு மிரு கங்களும் அதன் பெரிய சரீரத் தைக் கண்டு பயந்து அதன் கட்சி யில் சேர்ந்தன.

புலி, பூனை முதலியன சிங்கத் தையே ஆதரித்துப் பேசின. சிங்க ராஜா இல்லாவிடில் காட்டின் நிர்வாகமே ஊழலாகிவிடும் என்று எடுத்துக் காட்டின. மேலும் சிங்கராஜா காலத்தில் காட்டிற்கு எவ்வளவு நன்மைகள் ஏற்பட்டி ருக்கின்றன என்று பிரசாரம் செய் யத் தொடங்கின.

நரி கட்சியின் பிரதமர் கரடியா ரும். நரி ராஜாவாக வராவிட்டால் காட்டிற்கே பெரிய ஆபத்து நேர்ந்துவிடும் என்று பயமுறுத்த ஆரம்பித்துவிட்டது.

சிங்க ராஜா இவைகளைக் காதி லேயே போட்டுக்கொள்ள வில்லை. பொதுவாகக் காட்டின் நன்மைக் கும், மிருகங்களின் க்ஷேமத்தை யுமே அது கருதியதால் "யார் ராஜாவாக இருந்தால் என்ன? நிர் வாகம் நன்ருக இருக்கவேண்டும். பிரஜைகள் கஷ்டப்படக் கூடாது?" என்ற ஒரே நோக்கத்துடன் இருந் தது.

முடிவில் காட்டு மிருங்களும், பறவைகளும் மறுநாள் மாலை ஐந்து மணிக்கு ஆலமரத்தடியில் கூடின—யானை அக்கிராஸனம் வகித்தது.

பல கட்சிகளும் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொண்டன. பலத்த விவாதம் நடந்தது. கை கலந்துவிடும் போலாகிவிட்டது!

அக்கிராசனர் பாடு திண்டாட்ட மாகிவிட்டது. முடிவில் யானை ஒரு யோசனை கூறிற்று. 'தோழர் களே! நாளை இரண்டு மணிக்கு இதே இடத்தில் மறுபடி கூட வேண்டியது. தீர்மானங்களை ஓட் டுக்கு விட்டு எந்தக்கட்சிக்கு ஓட்டு கள் அதிகம் கிடைக்கிறதோ அக் கட்சித் தலைவரை ராஜாவாக ஏற் றுக்கொள்வது. சம்மதம்தானே?" என்றது.

இந்த யோசனையை எல்லாக் கட்சியாரும் ஒப்புக்கொண்டனர். கூட்டமும் கலவரத்தோடு கலைந் தது.

மறுநாளும் காட்டில் அமைதி இல்லை.

மாலை இரண்டு மணிக்குக் கூட வேண்டிய கூட்டம் குரங்கு, நாய் முதலியன குறித்த நேரத்தில் வரா ததால் மூன்று மணிக்குதான் ஆரம் பிக்க முடிந்தது.

சிங்கத்தை ஆதரிப்பவர்கள் நிற்க வேண்டும், நரியை ஆதரிப்பவர் கள் உட்கார்ந்தால் போதும் என்ற முடிவுக்கு வந்தன—இதர கட்சி யார்கள் தங்களுக்குப் போதுமான ஆதரவு கிடைக்காததால் மரியாதை யாக போட்டி போடாமல் வில கிக் கொண்டனர்.

நரி கட்சியார் செய்த சூட்சி யினல் நரிக்கு ஓட்டுகள் அதிகமா கவே கிடைத்துவிட்டது. நரியை யும் ராஜாவாக ஒப்புக்கொள்ளப் பட்டுவிட்டது.

நரி ராஜாவாக வந்ததும் தன் கட்சியாருக்கு காட்டில் உயர்ந்த பதவிகள், பட்டங்கள் வழங்கப் பட்டன.

நரி தந்திரசாலியானலும் நிர்வா கத் திறமை போதவில்லை. பக்கத் துக் காடுகளிலுள்ள சிங்கமும், புலி முதலியன தாராளமாக 'நரிக்' காட்டில் நுழைந்து அட்டஹாஸம் செய்யத் தொடங்கின. கொலை, களவு, அக்கிரமங்கள் அதிகரித்தன. பிறகுப் பஞ்சம் காரணமாக ஜனங் கள் காட்டினுள் புகுந்து ஏராள மான மரங்களை வெட்டிக்கொண்டு போயினர் தற்காப்பு போத வில்லை. நிர்வாகத்தில் ஊழல் அதி கரித்தது. ஜனன மரணக் கணக் கையே எழுதாமல் விட்டுவிட்டது அணில்!

மறுபடியும் காட்டிலே குழப் பம். கட்சிப் பிரதி கட்சிகள் முளைத்தன—நரி கட்சியில் பிளவு ஏற்பட்டது. 'சிங்கராஜா' கட்சி யினர் தங்கள் யோசனையை ஏற் கனவேயே கேட்காததின் பலன் தான் இது என்று இடித்துக் காட் டினர்.

அருகாமையிலுள்ள காடுகளில் 'சிங்கம்' தான் ராஜா. அமைதி நில வியது—பிரஜைகளும் பயமின்றி சந்தோஷமாகக் காலந்தள்ளினர். ஆச்சரியப்படும்படியான திட்டங் கள்!

'நரி'க் காட்டு மிருகங்களுக்கு பெருத்த ஏமாற்றமாகிவிட்டது! மறுபடி ஒன்று கூடின. சிங்கத் தையே மறுபடியும் ராஜாவாகக் கொள்ள தீர்மானித்தன. சிங் கத்தை சரணடைந்தன — நடந் ததையெல்லாம் சொல்லி முறை யிட்டன. தங்களுடைய முட் டாள் தனமான கொள்கைகளுக் காகவும் செய்கைகளுக்காகவும் வருந்தின.

சிங்கராஜாவுக்கோ வயதாகிவிட் டது. காட்டின் க்ஷேமத்தை உத் தேசித்தும், எதிர்காலத்தை ஊகித் தும் மறுபடி ராஜாவாக பதவி ஏற் றுக்கொள்ள ஒப்புக்கொண்டது.

மிருகங்களும், பறவைகளும் சிங் கத்தின் பரந்த நோக்கங்களை வெகு வாகப் பாராட்டின.

இதைக் கேள்வியுற்ற நரி "காட்டு ராஜா என்ருல் லேசுப் பட்ட காரியமா? திறமையும் அனுபோகமும் வேண்டாமா?" என்று, சொல்லிக்கொள்ளாமல் எங்கோ ஊளையிடாமல் ஓடிவிட் டது.

நரியின் நண்பர் கரடியும் மரத் தின் மேலேயே தன் வாழ்நாள் பூருவும் கழித்துவிட தீர்மானித் திருப்பதாக வதந்தி.

காட்டிற்கு ராஜா 'சிங்கம்' தானே?






டோங்ரேயின்—
பாலாம்ருதம்
குழந்தைகளுக்கு
பிரசித்திபெற்ற டானிக்

விகடன் பரிமள பாக்குத்தூள்.
முகமலர்ச்சியே வாழ்க்கையின் இன்பம்.
இன்பம் தருவது குளிர்ந்த மணம் வீசும்!
விகடன் பரிமள பாக்குத்துள்தான்
அநேகப் பொருட்காட்சிகளில்
முதல் பரிசு பெற்றது.
விற்பனையாளர்கள் தேவை.
மாதம் 25—60—100 சம்பளம்
மாணிக்க விலாஸ், 11 பீட், மதராஸ்.
தென்னுற்காடு விற்பனையாளர் :—
M. நஜ்முதீன், புதுபாளையம், கூடலூர்

எ.கே. AK பீடி
ஒருமுறைவாங்கிப்பரிசூதியுங்கள்
A. அப்துல் கரீம்,
A.K பீடி பாக்டரி
28. பாலக்கரை திருச்சி

மலர்
ல்
வருகிறது.
ரு. 1.

சீவாஜி

20—6—48 SUNDAY

ESTD: 1935.
REGISTERED No.
M. 3398.



நார்வே நாட்டின் நலந்திகழ் வானப் போர் வலிகாட்டப் போந்த விமானம்



நற்பிரீத்தானிய நாட்டின் வர்த்தக நலந்திகழ் காட்சியோ நானிலமாட்சி




பெருஞ்சுமை தாங்கிச் செல்லுமோர் வண்டி பெயர்ந்து முச்சந்தி திரும்புது பாரீர் !